பான் நெ· 15. விலை 2 அணா. REGD. NO 4642

திராவிடநாடு

மலர் 12 | 8—11—53 | இதழ் 19

விந்தைக்குரிய காட்சி!

-[அண்ணல்]-

“காந்தியார் ஆரம்பிக்கப் போகும் பாராட்டத்தில் நீங்கள் கலந்து காள்ளப்போகிறீர்களா?”

“தாங்கள் கலந்துகோள்ளப்போவக உத்தேசமோ?”

“நான் காங்கிரஸ்காரனல்லவே!”

“பிறகு, என்னைமட்டும் ஏன் கேட்டீர்கள்?”

*

கேட்டவர், கிருபர்! பதிலளித்த , ஆச்சாரியார்!!

1942லே, வார்தா சென்று திரும் ஆச்சாரியாரை, கிருபர், சந்தித் -கேட்டார். கிடைத்தது; மேற் ட பதில்!!

“ஆகஸ்ட்டுப் போர்” — என்று மருந் தேசியத் தோழர்கள் கூறிக் ள்கிருர்களே, அந்தப் போராட் டைதப்பற்றித்தான், இவ்வண் ம் அசிரத்தையாகக் கூறினர், சாரியார். இன்று, காங்கிரசை டு வெளியேறி, ‘களம்’ அமைக் ஆச்சாரிய கிருபளானி, ‘பெற் சுயராஜ்யம், இன்றேல் மரண ஜ்யம்’ என்று முழக்கமிட்ட று-ஆச்சாரியார், காங்கிரசைப என்ன கூறினர் தெரியுமா! றில் சிக்கிய வண்டி!!—என்ருர். என்றது, எதனை? அறிவர், ஸ்டு வீரர்கள்.

ங்கே துப்பாக்கி முழக்கம்! கே ரயில் கவிழ்ந்தது! காமராசர் தண்டனை பெற்ருர்! ஜெயப்பிரகாஷ் ‘ஐஸ்’ பெட்டியில் உட்காரவைக்கப்பட்டார்—இவ்விதம், பரபரப்பான செய்திகள், தேசிய ஏடுகளில் வந்து கொண்டிருந்தபோது, இன்று மார்தட்டுகிருரே, இந்த ‘மகான்’, கல்கியின் விருந்திலும், ரசிகரணியின் பாவத்திலும்-காலத்தை யோட்டிக் கிடந்தார். அதுமட்டுமல்ல, ‘வெள்ளையனே வெளியேறு’-என்று கோஷம்எழுப்பிவிட்டால் போதுமா. இதைக் கேட்டு, அவன் வெளியேறப் போவதில்லை என்பது திண்ணம்”-இவ்வண்ணம், திருவாய் மலர்ந்தருளினர்—தேசியத் தோழர்கள், நாடெங்கும், ‘வெள்ளையனே வெளியேறு’ என்று முழக்கமிட்டு வந்தபோது.

ஆசை வந்தால், ‘அரசியல் தியாக வேடமும்’, ஆபத்து நெருங்கினல் ‘அஞ்ஞாத வாசமும்’, ஆச்சாரியாரின் வாழ்க்கையில், சகஜமான சம்பவங்கள்.

அந்த ‘அஞ்ஞாதவாச நாட்களில்’ அவர் காங்கிரசைக் குறித்து வழங்கிய குட்டிக் கதைகளும், நடத்திய கோணங்கிச் சேட்டைகளும் கொஞ்சநஞ்சமல்ல. அறிவர், மக்கள். ‘காங்கிரஸ்’ கசந்ததும்—அல்ல! அல்ல!! சில நாட்களுக்கு அங்கிருப்பது ஆபத்து என்றறிந்ததும்—அவர் வெளியேறி, யாராருடன் கூடியுறவாடினர் என்பதை—காங்கிரஸ் தோழர்கள் மறந்திருக்க முடியாது. அவரது ‘அஞ்ஞாத வாச’ காலத்தின்போது, பொன்மலையில் நடைபெற்றது, ஒரு கம்யூனிஸ்ட் ரயில்வே மாநாடு. அதில, முக்கியப் பொறுப்பேற்றுக் கலந்து கொண்டார், ஆச்சாரியார். ‘கல்கி’—படங்கள் போட்டு, கம்யூனிஸ்டுக் கட்சியின் அகில உலகப் புகழைப் பக்கம் பக்கமாக வர்ணித்தது. “ஆச்சாரியார், கம்யூனிஸ்டாகிவிடுவார்!”—இவ்விதம், நாடு பேசியது. கம்யூனிஸ்டுகளிடம் மட்டுமல்ல, காங்கிரஸ்காரர்களை மிரட்டும் ஆசை வரும்போதெல்லாம், எவரழைத்தாலும் சென்று, ஆங்காங்கும் தன்னைக் காட்டிக்கொள்ளத் தவறியதில்லை, அவர் எதிர்க்கட்சிகளிலெல்லாம், உறவாடினர்! எங்கே பிருந்தாலென்ன?-என்ருர்! இன்றுபோல் அன்றும், இதோபதேசங்களை வழங்கினர்.

தமிழ்நாட்டு அரசியல் வாழ்வைக் குட்டிச்சுவராக்கியோரில் ஒருவராகிய இவரிடம், தேசிய நண்பர்கள் சிலர், அரசியல் நாணயத்தையும் கண்யத்தையும் எதிர்பார்க்கின்றனராம். வேம்பிடம் இனிப்பும், பாம்பிடம் பரிசும், புலியிடம் புத்த மதமும், கிட்டுமா! கிடைக்குமென எதிர்பார்ப்பதுதான் விவேகமா!!—இதனை மறந்தனர்போலும், அவர்கள்.

அன்பர் ஆச்சாரியார், தனக்குப் பிடித்தமான வேதாந்த வியாக்யானங்களோடு, வக்கீல் தொழிலோடு, மாம்பலத்திலும் மைலாப்பூரிலும் உறவு கொண்டாடுவதோடு இருந்திருந்தால், எவருக்கும் கவலையில்லை. அவரையும் ஒரு 'அல்லாடி' என்று புகழ்ந்துவிட்டுப் போயிருக்கும், தமிழுலகம். ஆனால், அரசியல் சதுரங்கத்தில், ஆடிவருகிறார். அந்த ஆட்டத்துக்கு 'சாணக்ய தந்திரம்' என்றும் பெயர் சூட்டப்படுகிறது.

*

அரசியலில் ஈடுபடுவோருக்கு, கொள்கை மாற்றங்கள் உண்டாதலும், அதன்விளைவாக, கூடாரத்தை விட்டு விலகுவதும், சகஜம்தான். கால ஓட்டத்தின் விளைவாக, கருத்துக்கள் மாறினால், தம்முடைய போக்கினை, மாற்றிக்கொள்வர்— இருந்த கட்சியைவிட்டு ராஜினாமா செய்துவிட்டு-வெளியேறுவர். அந்தக் கட்சியின் கேடுகளை பெதிர்த்து மக்களிடம் சொல்வர். ஆனால், ஆச்சாரியார், அந்தவகையானவரல்ல. இஷ்டப்பட்டபோது, காங்கிரசிலிருப்பார்! சில நேரங்களில் காங்கிரசிலிருந்தபடியே, மேடைகளில் ஏசுவார்! 'நான் காங்கிரசுக்குமட்டுமல்ல — நாட்டுக்கே சொந்தமானவன்' என்று நவில்வார். இவ்விதம் ஒருவர் கூறக்கூடாதா? — என்று கேட்கலாம். கூறலாம்! அது, அவருடைய தனி உரிமை!! ஆனால், ஒரு கட்சி — அதற்கென ஒரு கட்டுப்பாடு — என்றிருந்தால், வாயுள்ளவனெல்லாம் கொள்கை வகுத்துச் செல்வதும், விருப்பம்போல் விளக்கங்கள் தருவதும், விபரீதமானது. இந்த விபரீதத்தை, கொள்கைக்காகப் பாடுபடும், அரசியல் கட்சிகள் அனுமதியா. அதிலும் காங்கிரஸ் இயக்கம், இதுபோன்றவர்களை, விட்டுவைத்ததில்லை. ஆச்சாரியாரைவிட தேசத்தியாகமும், தன்னலமில்லாச்சேவையும் செய்த பற்பலரை, அது இழந்திருக்கிறது! பலர், கட்சியினின்றும் வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்!! தோழர் நாரிமன்—டாக்டர் கரே—எம்.என். ராய்—சுபாஷ்போஸ் — இவ்விதம், காங்கிரஸ் கூண்டிலிருந்து சென்றோர் பட்டியல் மிகப் பெரிது! அவர்களை, ஆச்சாரியார் அவர்களுடன் ஒப்பிடுவதுகூடத் தவறு. [illegible]

'இழந்த' காங்கிரஸ் இயக்கம், இஷ்டம்போல் ஆடி, துஷ்டத்தனம் செய்யும் ஆச்சாரியார்மாட்டும்மட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததில்லை! ஆமாம், விந்தைக்குரிய காட்சிதான். 'ஆகஸ்டு இயக்கத்தின்' போது, இவ்விதம் பேசித்திரிந்தாரே, என்பதற்காக அவர்மீது, எவ்வித நடவடிக்கையும் எடுத்ததில்லை, காங்கிரஸ் பீடம். அதனால், ஆகஸ்டு இயக்கத்தாக்குப்பின், அனைவரும் சிறையிலிருந்து மீண்ட பிற்பாடு, ஆச்சாரியாரின் சூழ்ச்சியை தமிழ்நாட்டு காங்கிரஸ் வாலிபர்கள் கண்டித்தனர். காமராஜர், வீரமுழக்கமிட்டார். ஆச்சாரியாரோ, இன்றுபோல் அன்றும் பேசிவந்தார்! திருச்செங்கோட்டில், திருட்டுத்தனமாக, கட்சிக்குள் காலடி எடுத்து வைத்தாரெனச் சொல்லி —அவரது நுழைவை, ஆட்சேபித்தது, தமிழ்நாட்டுக் காங்கிரஸ். ஆனால், அப்போதும், விலக்கப்படவில்லை. ஆச்சாரியாரின் அரசியல் அநாகரீகத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது!

தமிழகத்தில் காங்கிரசின் இலட்சியத்துக்காகப் போராடிய வாலிபரெல்லாம், ஆத்திரமடைந்தனர் — உழைக்க நாம், பரிவு அவருக்கா!— என்று கேட்டனர். அவரோ, அந்த வாலிபர்களைப் பார்த்துச் சிரித்தார். அந்தச் சிரிப்பு, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராஜரின்மீது ஈட்டிபோல் பாய்ந்தது. எனவே, அவரும் காங்கிரசும், ஆச்சாரியாரை —மதிக்கவில்லை. துச்சமாக எண்ணிற்று.

இந்த வெட்கக்கேட்டை அறிந்த ஆச்சாரியார், இன்றுபோல், அன்றும் செய்தார். காங்கிரசின் தயவு தேவை — காங்கிரசுக்குள் நுழைய காமராஜரோ 'ஆரிய—திராவிடப்' போர் கொட்டுகிறார்—எனும் நிலை வந்ததும், வார்தா சென்றார்! சம்பந்தியை அழைத்தார்! காந்தியாருடன் தென்னாடு முழுமையும் சுற்றுப்பயணம் நடத்தினார்! அப்போது, காந்தியாருக் கருகிலிருக்கும், 'பாக்கியம்' பெற்றவர் ஆச்சாரியாரேயன்றி, காமராஜர், அல்ல. கட்டியக்காரனுக்கூட, செல்லமுடியவில்லை, காமராஜால். காந்தியார் சுற்றுப்பயணம் முடிந்து சென்றபோது, சொல்லிச் சென்றார் — 'தமிழ்நாட்டு காங்கிரசில், 'கிளிக்' இருக்கிறது', என்று.

சிறினர், தேசிய நண்பர்... சாரியார் ஒருவர்—அவருடை... கிரமப் போக்கை அனுமதி... குப் பெயர், 'கிளிக்கா!'... மூட்டிவிட்டாரே, இந்தக்... பட்டர்!—என்றனர். சிலர்... வாபஸ் பெறவேண்டும் அ... தையை, என்றனர். எந்த... யடிகள் துவக்கிய, போராட்... சேரமுடியாதென்றாரோ, ... காந்தியடிகளின் அனுதாப... ஆதரவையும் பெற்றார், ஆச்ச... எந்தக் காந்தியடிகளின் ... தையை மதித்து தியாகத்... களை யேற்றனரோ, தென்... காங்கிரசார், அவர்கள், பெ... வில்லை, காந்தியடிகளின் அ...

*

மராட்டிய மண்ணைத் தம்... களிநடனக் காடாக்கத் திட்ட... டிய கோவிந்த பட்டரும், ... பட்டரும் — வீரசிவாஜியின் ... முனையிலிருந்து தப்ப, கன்... வாசியாம் காகு பட்டரின் உ... நாடி, தமது 'இந்துசாம்ராஜ்ய... அமைத்த காட்சியை, 'சந்தி... கன்' நாடகம் பார்த்தோர் அ... அதுபோல, காவிரிக்கரைவா... ஆச்சாரியாரும், தமக்கு ... வந்தபோதெல்லாம் கன்னைக்... குக் காவடி யெடுக்கத் த... தில்லை. 'காங்கிரசில் உன... இல்லை!' என்று தென்னாட்டுக்... கிரஸ் இத்தியவரை விரட்டிய... 1946-ம் ஆண்டில், ஆசப்அலி... ராக அனுப்பப்பட்டதையும்... ரது தலையீட்டால், தமிழ... காங்கிரஸ் பார்லிமெண்டரி... டில் இடம் பெற்ற வகையின... நம்மைவிட—காங்கிரஸ் நண்... அறிவர். தானிழந்த செல்வா... பெற, காந்தியாரின் துணை ... ஓர் முறை! தனக்கோர்இடம்... கொள்ள, ஆசப்அலியை அ... வந்தார் மற்றோர்முறை! இப்... பண்டிதநேருவை, இட்டு ... தமிழகத்தாருக்குத் தன் ... மையை உணர்த்தியிருக்கிற... இந்தச் சட்டம் தமிழக அ... வரலாற்றில், அன்று முதல் ... வரை நடைபெற்று வரு... இதனை அறிந்தும், நமதரும... எம். எல். ஏ.க்கள் சிலர், ... களுக்கு முன்பு, வேண்... ஒன்று விடுத்தனராம்—டில்லி... வருக்கு. அந்த [illegible] ...

அன்பர்களில் பழம் பெரும்
ஸ்வாதியும் — ஆச்சாரியார்
பொறுப்பேற்றபோது அக
வருமான—சேலம் டாக்டர்
ஜுலு அவர்கள் ஒருவராம்.
யார் கூறுவதுபோல, அவ
ரு வயோதிகர்தாம்! ஆச்சாரி
அரசியல் கதைகளை அறிந்த
அவரும், இன்னும்சிலரும்
ரனில், சாதாரணமானவர்
எம். எல். ஏ.க்கள்—வேண்டு
விடுத்தனராம் டில்லித் தலை
ண்டிதநேருவுக்கு.

வேண்டுகோள் தூக்கிச்
மூன்று விஷயங்கள்.

ஆச்சாரியாரின் ஆட்சி
ற விரும்பத்தகாததாகஇருக்
து.

அவர் கொண்டுவந்திருக்
புதிய கல்வித்திட்டம் மக்கள்
வுக்கு உகந்ததல்ல.

அவர் 'ஜோதிவெங்கடா
எனும் காங்கிரசல்லாதவரை
ரியாக ஆக்கியது தவறு.

ப்படித்த பண்டிதர், கோபா
தோடு குறிப்பொன்று
பியுள்ளாராம். தேசிய ஏடு
த விதமாகத் தலைப்புக்
த்துப் பிரசுரித்துள்ளன —
எம். எல். ஏ. க்களின் முயற்சி
சுத்த' தென்றும், பண்டித
ன் பலமான கண்டனக்குறிப்
ம் பற்பலவிதமான தலைப்பு
காடுத்து பிரசுரம் செய்துள்
இத்தகைய பதில் தவிர,
க்களையாரிடமிருந்து,
ன்ன கிடைக்கமுடியும்! ஆச்
ருக்காக சென்னைவந்து, சிங்
தம் பாடிவிட்டு, அவரை
த்தோரையெல்லாம், 'காட்டு
ண்டிகள்' என்று 'கானக்குரல்'
பிச் சென்றவரல்லவா, பண்டி
ட்டிக்காயீடம், கட்டிச் சக்
ருசியை எதிர்பார்த்தோர் —
தனர். ஏமாந்தது உண்மை.
ர்கள் ருசி கிடைக்கு
று, எதிர்பார்த்தது தவறு.
னில், டில்லி, குனிந்தோர்தலை
குட்டிக்கொண்டே யிருப்பதை
ஆச்சாரியார் தனது அரசிய
டத்துக்கு யாரிடம் 'பிடி'
திருக்கிறாரென்பதையும் டாக்
தராஜுலு போன்றோர்,
ரிவர். எனவேதான் இந்த நண்
, ஆச்சாரியாரிடமும் அவரது
சகாக்களிடமும், அரசியல் நாணயத்தையும் கண்யத்தையும் எதிர்பார்ப்பது தவறென்றோம்.

•

காங்கிரஸ் M. L A-க்களின் இம் முயற்சி குறித்து, குற்றாலம் செல்லும் வழியில், ஆச்சாரியார் அவர்கள் சில வார்த்தைகளைச் செப்பியுள்ளார். அவர் சிதறிய வார்த்தைகளில் ஒன்று, தேசியத் தோழர்களின் சிந்தைக்கு வைக்கவேண்டிய ஒன்றாகும். அவர், கூறுகிறார்:

"பல பிரச்னைகளை கட்சியிலுள்ளவர்கள், எழுப்பலாம். உண்மைத் தலைவரின் பொறுப்பு, அவர்கள் என்ன சொல்வார்களென்பதைப் பற்றி கவலைப்படாமல், தனக்கு சரியெனப்படுவதை நிறைவேற்றிக் கொண்டு செல்லவேண்டும்"

உண்மைத்தலைவரின் பொறுப்பை யுணர்த்துகிறார், ஆச்சாரியார்.

இவரை, 'தலைவர்' என ஏற்றுக் கொண்டோர், யார்? — சிந்தனைக்குரிய விஷயம்.

ஆனால், 'தலைவர்' தனக்குச் சரியெனப்பட்ட காரியத்தைச் செய்து கொண்டே செல்வதென்றால், பிறகு கட்சி ஏன்! காரியதரிசி ஏன்! தலைவர் ஏன்! தொண்டர்கள் ஏன்!

மேற்கண்ட வாசகமூலம், ஆச்சாரியாரின் அந்தரங்கம், வெளியாகிறது. வெளியாவதும்—இது முதல் முறையல்ல. கட்சி என்பதை மதிக்கும் கண்யரல்ல, அவர்! 'தனக்காகவே கட்சி' எனும் தருக்கெண்ணம் படைத்தோரில் முதலிடம் வகிப்பவர் அவர்!

எனவே, அவர், அவ்விதம் கேட்பதைப்பற்றி ஆச்சரியப்படவில்லை, நாம்.

ஆனால், 'அகில உலக ஜோதி'— ஜனநாயக தவப்புதல்வர்—என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிற பண்டித நேரு அவர்கள் இருக்கிறாரே, அவர் காங்கிரசின் தலைவராக இருப்பவர். தான் பிரதம மந்திரியாகயிருந்தால் பட்டுப்போதாது—கட்சியின் தலைவராகவும் இருந்தால்தான் காங்கிரசைக் காப்பாற்றமுடியும் — எனும் எண்ணத்தில், 'அகில இந்திய ராஷ்டிரபதி'யாக விளங்குபவர். அந்தப் 'பதி' சென்னை காங்கிரஸ் M-L-A-க்களுக்கு அனுப்பிய பதிலைக் காணும் போது, விந்தையாயிருக்கிறது. ஆச்சாரியாரின் ஆட்சி பிடிக்கவில்லை— அவர் எதேச்சாதிகாரமாக இருக்கிறார் —எந்த விஷயத்தையும் கட்சியைக் கலந்து செய்யவில்லை — இவ்விதம், குறைகள் கூறப்பட்டதற்கு, காரசாரமாகக் கடிதம் ஒன்று அனுப்பியுள்ளாராம். அக்கடிதத்தில் அவர், குறிப்பிடுகிறாராம்—"அரசியல், ஜனநாயகம் என்றெல்லாம் குழப்பவேண்டாம்" என்று. ஒரு மாநில M-L-A-க்களின், மனவேகம், குழப்புவதாகத் தென்படுகிறது, அக்கோமானுக்கு. 'ஜனநாயகம்' என்று பேசுவதுகூடப் பிடிக்கவில்லை, அவருக்கு. அதுமட்டுமல்ல! 'ஆச்சாரியாரின் ஆட்சி பிடிக்கவில்லை' என்று சென்னை M-L-A-க்கள்—அதுவும் காங்கிரஸ்!—செய்தி தெரிவித்தால், அவர் கூறுகிறார், "ராஜாஜியின் நிர்வாகத் திறமையை நான் பாராட்டுகிறேன்" என்று. பண்டிதருக்கு, பாராட்டக் கூடியதாக இருக்கிறது, ஆச்சாரியாரின் நிர்வாகம்! ஆனால், ஆச்சாரியாரின் ஆட்சியில் அடங்கிக் கிடப்போருக்குப் பிடிக்கவில்லை!

பண்டிதர்—ஆச்சாரியார் ஆளும்,

(15-ம் பக்கம் பார்க்க)

இரு முகம்

திருச்சி ஆச்சாரியார்

எனக்கும் அவருக்கும் (சேர்மன் ராமசாமிதேவர்) ஒரே கஷ்டம்தான். எங்களுக்கு விரோதமாக அடியிலிருந்து வேலை செய்பவர்களிருப்பதே இக்கஷ்டம். அவர் க்ஷத்திரியர்—நான் பிராம்மணன். இது ஒன்றுதான் வித்தியாசம். சேர்மனுக்கு, நான், ஆசி கூறுகிறேன்!

தென்காசி ஆச்சாரியார்

வாரப்பத்திரிகை போதாதென்று, தினப்பத்திரிகைவெளியிட்டு, தினசரி துவேஷத்தைப் பரப்புகிறார்கள். ஆரியர்—திராவிடர் என்ற பிரிவினையைக் கிளப்புகிறார்கள். அது பொய்யானகதை. மொழியிலிருந்து குலத்தைக் கண்டுபிடிக்க முடியாது.

"ஆடும்-தழையும்!"

"கோவிந்த நாம சங்கீர்த்தனம்........"

"கோவிந்தா! கோவிந்தா!!"

இந்தக்கூக்குரலைப் பஜனை மடங்களில் காணலாம், நீங்கள்.

இதைக் கேட்கும்போது, "ஆகா! பஜனைமடத்தில் பக்திப் பிரவாகம் கரைபுரண்டோடுகிறதே!!" என்பது போலத் தோன்றும், வெளியிலிருப்போருக்கு.

சிறிது நேரம் சென்றதும், பாகவதகாலட்சேபம்' செய்த பாகவதர், நைவேத்யத்தட்டினை எடுத்துக் கொண்டு பக்தகோடிகளிடம் வருவார்! பகவன் நாமத்தைப் பஜித்த அக்கூட்டம், பாய்ந்தடித்துக் கொண்டு, 'நான் முந்தி—நீ முந்தி' என்று, சுண்டல் கடலைக்கும் சர்க்கரைப் பொங்கலுக்கும், போட்டியிட்டுக் கொண்டு, 'எனக்கு! எனக்கு!!' என்று கூச்சலிடுவார்கள்.

"கோவிந்தா! கோவிந்தா!!—என்று சொல்லிக்கொண்டு, வரிசையாக உட்காருங்கள், அப்போதுதான் கொடுப்பேன்!" — என்பார், பாகவதர்.

உடனே பக்தகோடிகள் வரிசையாக உட்கார்ந்துகொண்டு, "கோவிந்தா! கோவிந்தா!! என்று, மறுபடியும், கூச்சல் எழுப்புவார்கள்.

இந்தப்பஜனை மடக்காட்சியை நன்கறிவர், நமது தோழர்கள்.

இருந்தும், தற்போது மந்திரிகளாக இருக்கும் கோயம்புத்தூர் சுப்பிரமணியமும், திருமங்கலம் ராஜாராமும், ஆங்காங்கு சென்று செய்யும்பிரசங்கங்களைக்குறிப்பிட்டு கோபமாக நமக்கு, குறிப்பெடுத்து அனுப்புகிறார்கள்—நம் தோழர்கள்.

தோழர்கள் சுப்பிரமணியமும் ராஜாராமும், இன்னபிறரும், நம்மைப்பற்றி, இதுபோது பேசித்திரிவது குறித்து, நாம் வேடிக்கையாகச் சிரிக்கவேண்டிய கட்டம், இது.

ராஜாராம், கண்டபடி—ஏசுகிறார்! சுப்பிரமணியம், 'தி. மு. க. நூல்களைத் தடைவிதிக்க'வேண்டுமென்று பேசுகிறார்!—அங்கே இவ்விதம் பேசினார், இங்கே இப்படிக் கொட்டினார்—என்ற செய்திகளைத் தினசரி ஏடுகளில் காணும்போது, நம்மையும் மீறிக்கொண்டு சிரிப்பு வருகிறது, நமக்கு.

நம்முடைய நூல்களைத் தடைவிதித்தால், முதலில் சோதனையிடப்படவேண்டிய இடங்கள், தோழர்கள் ராஜாராம், சுப்பிரமணியம் போன்றோரது வீடுகள்தான்! அவர்கள் வீடுமட்டுமல்ல, ஆச்சாரியாரது இல்லத்திலும், நம் ஏடுகளே நடமாடுகின்றன!! ஆகவே, அவர்கள் பேசும் வேகத்தைப்பற்றி, நாம் சிரத்தைகொள்ள வேண்டியதில்லை. அதிலும் தோழர் சுப்பிரமணியம் இருக்கிறாரே, அவர், தன் மனதில் தோன்றியதையெல்லாம் கொட்டுகிறார்—மந்திரியென்றால் அதற்குச் சில பொறுப்புகளும் உண்டு. நண்பர், புதிதல்லவா! இன்னும் கற்றுக் கொள்ளவில்லைபோலும். ஒரு விசித்திரம் கேளுங்கள்—கோவை ஆரம்பப் பள்ளிகள் மாநாட்டில் பேசும்போது, 'பள்ளிக்கூடங்களில் அரசியல் விஷயம் பேசும், ஆபத்தை நிச்சயம் ஒடுக்கவேண்டும்' என்று சொன்னாராம். ஆனால் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இவரே தான், சென்னை வண்ணையம்பதி தியாகராசக் கல்லூரியில் பேசும் போது, அரசியல் பொருளாதாரம் விஞ்ஞானத்தைப் பற்றியல்ல பேசியது — முழுக்க முழுக்க திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றித் தான்! இவ்விதம், அங்கொன்றும் இங்கொன்றும் பேசும், இவர்களைப் பற்றி, ஆத்திரம் கொள்ளலாமா? ஐயோ, பாபம்! 'அமைச்சர்' எனும் அடைமொழி இருக்கும் வரையில் தானே ஆட்டபாட்டமெல்லாம!!

*

"ராஜாஜி-வாழ்க! ராஜாஜி வாழ்க!!" — என்று, செல்லுமிடமெல்லாம், இவர்கள் கோஷிப்பதைக் குறிப்பிடத்தான், பஜனைமடக்காட்சியை, உதாரணமாகக் குறிப்பிட்டோம்.

தன்னுடைய மந்திரிசபையிலிருப்பவர்களை இந்த வேலைக்காகத்தான் அன்பர் ஆச்சாரியார், வைத்திருக்கிறார். அதற்கு அவர் வழங்கும் 'நைவேத்யம்' மந்திரிப்பதவி.

நீங்கள் நன்றாகச் சிந்தித்தால் விளங்கும்—ஆச்சாரியாரின் ஆட்சியைப்பற்றி அதிகமாகப் பிரசங்கம் செய்வது மந்திரிமார்களேயன்றி வேறெவருமல்ல.

இதுவே, வெட்கக்கேடான விஷயம்! ஆனால் 'பஜகோவிந்தப் பாகவதரு'க்கு வேறுவழியில்லை! ஆகவே இந்த 'பஜனை'யாவது நடக்கட்டும் என்றிருக்கிறார்!!

இதனால்தான் நம் சுப்பிரமணியத்தையும் ராஜாராமையும், 'அநுமார் விபீடனார்; என்று வர்ணிக்கிறார்.

இந்த வர்ணனையின் பொருள் அவர்கள் அறியமாட்டார்களென்று எண்ணாதீர்கள்! தினசரி வீட்டில் அவர்களுடையகுழந்தைகளே இண்டல் செய்யும்!! — எனினும், சகித்துக்கொண்டிருக்கிறார்கள், சர்க்கார் அதிகாரமெனும் சர்க்கரையை நாக்கில் தடவிக்கொண்டிருப்பதால்.

இந்த மந்திரிகளைப்பற்றி ஆச்சாரியார் தென்காசியில், அருமையான உதாரணம் ஒன்று கொடுத்திருக்கிறார். இவர்களெல்லாம் ஆடுகளாம் ஆச்சாரியார் சொல்லுகிறார்.

"பட்டியில், ஆடுகளைத்தான் யாரும் அடைப்பார்கள். ஓநாய்களையும் நரிகளையும் போட்டா அடைக்க முடியும்?"

'பட்டி' என்றது, மந்திரி சபையை. காங்கிரசிலிருக்கும் 'ஓநாய்'களையும் நரிகளையும் அடை[த்]தால், தனக்கு ஆபத்து வருமென்றும், அதனாலேயே 'ஆடுகளை'ப் வை[த்]திருப்பதாகவும், வெளியிட்டிருக்கிறார்.

அந்த 'ஆடுகளிடம்' எதை எதிர்பார்க்க முடியும்? நமது தோழர்கள் இவ்விதமெல்லாம் ஆச்சாரியார் எ[...] வது காண வெட்கமாயிருக்கிற[து] நமக்கு. ஆனால் அவர்களோ 'தழை'யைத் தின்னும் பெருமிதத்தி[ல்] தாறுமாறாக 'கோவிந்தா!' போ[டு]கிறார்கள். பாபம், மன்னியுங்கள் கோபப்படாதீர்கள்!!

அந்தப் பூந்தோட்டம்!

ாட்டின் அடிமைச் சங்கிலியை
ுப்போம்! — மனித அடிமைத்
ளயை உடைப்போம்! — சமுதா
தீங்கு தரும் பழக்க வழக்கங்
ச் சாய்ப்போம்!—எண்ணத்தை
ுமையாக்கி நம்மை 'எருமை'
ாக்கும் சட்ட திட்டங்களைப்
டிப் பொடியாக்குவோம்! —
னும் வீரக்குரல், கேட்காத
மே, இந்த உலகில் இருக்க முடி
. இன்று உலகின் 'பணத்
ாட்டமாக' விளங்கும் அமெரிக்
வில், அன்றோர் நாள், இந்த விடு
லக்கீதம் ஒலித்தது! தம்முடைய
ாந்த தேசமான' இங்கிலாந்தின்
யிலிருந்து, தாம் குடியேறிய
மெரிக்காவை மீட்க, அங்கே
ுப்போர் சங்கநாதம் செய்தனர்.
த உரிமைக்குரல், இங்கிலாந்துக்
ளும் ஒலித்ததுண்டு — அங்
ுந்த மதக்குருக்களும், மதோன்
தமன்னர்களும், கொடுமை
ட்டையாடியபோது! 'ஐரோப்
வின் திலகம்' என்று போற்றப்
ட பிரான்சு பூமியிலும், இந்த
தலைக் குரல், கிளம்பியதுண்டு—
களிடமிருந்து. இவ்வண்ணம்,
தப்பூமியை, எடுத்துக்கொண்
லும் ஒவ்வொருவித உரிமைக்
ல் எழுப்பாமற் போகவில்லை.
னல், அந்தக் குரலில்—சிறு சிறு
ளவு வித்யாசங்கள் உண்டென்று
ம்—அவை யாவும், விடுதலைவேட்
யின் விளைவுகளேயாகும். மாற்
ின் பிடியிலிருந்து விலகவேண்
—சொந்தநாட்டுச் சூதாடிகளிட
ுந்து மக்கள் வாழ்வை மீட்க
ண்டும் — இனவெறியரிட
ுந்து நம் மக்களை வாழச்
ய்யவேண்டும்-பணம் படைத்
ார் அட்டகாசங்களிலிருந்து
ழயின் வாழ்வை நிமிர்க்க
ண்டும்-எத்தர்களாக வாழும்
த்தலைவர்களின் பிடியிலிருந்து
களை மீட்கவேண்டும் — இவ்
ணம், ஒவ்வோர் வகையில்,
வோரிடத்திலும் உரிமைக்
், எழும்பாமலில்லை — இன்
, ஒலிக்காமலில்லை.

*

மேற்குறிப்பிட்ட உரிமைகள் யாவையும் பெறுவதுதான், மனித வாழ்வில், இன்பத்தைப் பெறச் செய்யும். 'மனிதனைச் சுற்றியிருக்கும் பொருள்களைப் பாருங்கள்! அதோ, அசைந்து அசைந்தாடுகிறது, மரங்கள்—அவைகள் எவ்வளவு சுதந்திரமாக அசைகின்றன! அந்தச் சுதந்திரம் கூடவா, மனிதனுக்குக்கிடையாது. இதோ, உல்லாசமாகப் பறக்கிறது. வண்ணக்கிளி! இவ்விதம் பேசித்திரியக் கூடவா, மனிதனுக்கு உரிமை கூடாது. எவ்வளவு பெருங் கூட்டமாக, வக்காவும் கொக்குகளும் சென்று அமர்ந்து சிங்காரமாக, உணவு தேடுகின்றன! இந்தப் பேதமற்ற—சமத்துவ நிலை கூடவா, மனித சமுதாயத்துக்கு வரக்கூடாது''—இவ்விதம் கேட்பதும், இந்த உரிமைகளைப் பற்றி எண்ணத் தூண்டுவதும், சதா, இந்த உலகில் இன்னும் நடைபெற்ற வண்ணமேயிருக்கின்றது. ஐசுவரிய நாடான அமெரிக்காவானாலும், அகில உலகுக்கும் 'அடிப்படை உரிமை'களைப் போதித்த ஆங்கிலேயன் நாடானாலும், 'பிரெஞ்சுப் புரட்சி' கண்ட பிரான்சானாலும். எங்கும், இந்த விடுதலைப் போர், தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முதன் முதலில், 'விடுதலைக் குரல்' ஒலிக்கப்பட்டபோது. அந்த மாபெரும் பணிக்காகத் தத்தமது வாழ்வைப் பலியிட்ட வீராதி வீரர்களின் கல்லறைகள், ஒவ்வோர் நாட்டிலும் இருக்கின்றன. அந்தக் கல்லறைகளை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு, ஆங்காங்கேயிருக்கும் மனிதர்கள், மீண்டும் 'விடுதலை கீதம்' பாடவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அமெரிக்காவை, ஆங்கிலேய சாம்ராஜ்யத்திடமிருந்து மீட்டனர். எனினும், அங்கு, 'விடுதலைக் குரல்' இன்னும் கேட்கிறது. ஆங்கிலேய பூமியில் மன்னனும் மதக்குருக்களும் செய்த அட்டகாசங்களை ஒழித்து, 'உரிமைகளை'ப் பெற்றனர். ஆனால், இன்னும், அங்கே, அக்கீதம் கேட்கிறது. பிரான்சில் — கொடுங்கோலனை மன்னனை அழித்து, புரட்சி நடத்தினர், மக்கள். அங்கேயும், அந்த விடுதலைத் தாகம், இன்னும் அடங்கியபாடில்லை. காரணம் என்ன? மனித விடுதலையின் பல அத்தியாயங்களில், ஒரு சில அத்தியாயங்களை அவர்கள் படித்து முடித்தனரேயன்றி, முழுநூலையும் அவர்கள் முடிக்கவில்லை. அதனால்தான், அங்குள்ள மனிதர்களிடம், இன்னும் விடுதலைக் கீதம், ஒலிக்கிறது. இந்த மகத்தான உண்மைக்குச் சான்று தேட வேறெங்கும் செல்ல வேண்டாம்—இந்திய உபகண்டமே போதும். இங்கேயும், விடுதலை நூலின், ஒரு அத்தியாயத்தைத் தேசியத் தோழர்கள் முடித்தனரேயன்றி, மனிதனின் ஜீவாதார விஷயங்கள், முன்னிருந்த நிலைமையிலேயே வைக்கப்பட்டு விட்டன. மனிதன், சோலையில் ஆடும் தளிர் மரங்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தைக்கூட அனுபவிக்க முடியவில்லை, இங்கு! ஆங்கிலேயன் பிடியிலிருந்து விடுபட்டோம்'' என்பதோடு, அந்த விடுதலை அத்தியாயம் முடிந்துவிட்டதாகக் கருதிவிட்டனர், தேசியத் தோழர்கள். அதனாலேயே, இங்கும், இன்னும், அக்கீதம், பெருத்தளவில் ஒலிக்கிறது — நாடெங்கும் கேட்கிறது.



மனிதனுக்கு, நாட்டு விடுதலை கிடைத்து விட்டால் மட்டும் போதாது—அவன் மனிதனாக

வாழ, உலவ, இன்னும் சில 'சங்கிலி'கள் உடைத்தெறியப்பட வேண்டும். இந்த உண்மையை, தேசிய கட்சி, உணரத் தவறி விட்டது. குளத்தின் மீது படிந்திருந்த பாசி அகற்றப்பட்டதேயன்றி, அக்கடியில் தண்ணீரின் தூய்மையைக் கெடுக்கும் வகையில் படிந்திருக்கும் 'பச்சை'களைப் பற்றி, எண்ணவில்லை. இந்தக் குறைகளையே, அமெரிக்கச் சுதந்திரப் போரின் பின்பும், உலகப் புகழும் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகும், மன்னராதிக்கத்தை ஒழித்த இங்கிலாந்திலும் கண்டோம்—காண்கின்றோம்.

அதனாலேயே, அந்தந்த நாடுகளில், அந்த 'விடுதலைத் திருநாட்களை'ப் பற்றிப் பேசும்போது, மக்களின் உள்ளங்களில், மகிழ்ச்சியில்லை—மலர்ச்சியில்லை.

அதே காட்சியை, இந்திய சுதந்திர தின விழா கொண்டாடும் போது, இங்கேயும் காண்கிறோம்.

*

அகில உலகையும் ஆட்டிப் படைக்கும் ஆசையால், அமெரிக்கா, தத்தளிக்கிறது.

'கயானா'வுக்கு சுதந்திரம் வழங்கும், தூய மனப்பான்மை யேற்படவில்லை, ஆங்கிலேய பீடத்துக்கு.

பிரான்சிலோ, 'மாதத்துக்கொரு சபை'யாக, அரசியல் வாழ்வு அலைமோதிய வண்ணம் கிடக்கிறது.

வெளிவந்துவிட்டது!

THE ANSWER

விலை: அணா 6

(தபால் செலவு தனி)

அண்ணா, மதியழகன், நெடுஞ்செழியன், சம்பத், நடராசன் ஆகியோர் நீதிமன்றத்தில் தந்த வாக்குமூலங்கள்.

*

வியாபாரிகளுக்கு 20% கமிஷன் உண்டு.

*

விவரங்களுக்கு:—

பத்மா பிரஸ், காஞ்சிபுரம்.

இவைகள் நடத்திய, சுதந்திரப் போர்களும் — அதற்காக உயிர் துறந்தோரும், ஏராளம். ஆனால், அவைகளுக்குப்பின், அரசபீடத்திலமரும் பாக்கியம் பெற்றோர், திசைமாறிச் செயல்பட விட்டனர். விடுதலைக் குரல் ஒலிக்கப்பட்ட போது—அதன் விளைவுகளைப்பற்றிக் கவலைப்படாமல், தியாகத் தீயில் குளித்தோரின், வல்லமைகளைத் தமது அரசாட்சிக்கான 'லைசென்ஸ்' கொண்டு நினைத்து, சமுதாயத்தின் மேல் தளத்திலிருப்போர், ராஜ்யபாரம் நடாத்தத் துவங்கினர். ஏழைகளும் இலட்சியவாதிகளும் சிந்திய செந்நீர், இந்தப் 'பக்னீர்' வாசிகளின் சுயநலத்துக்கு இரையாக்கப்பட்டது. அதனாலேயே, அங்கு, மனித விடுதலையின் ஒரு அத்தியாயத்தோடு, நூல் நின்று விட்டது. அதைக் கண்டு ஏமாந்த இலட்சியவாதிகள், மற்ற அத்தியாயங்களையும் முடிக்கும் ஆவலால் உந்தப்பட்டு, விடுதலைப்போரைத் தொடர்ந்து நடத்தும் பணியிலீடுபடுகிறார்கள். அதன் விளைவாலேயே, 'நியூயார்க் நகரில் வேலை நிறுத்தம்', 'இங்கிலாந்தில் நிலக்கரிச் சுரங்கத்தில் தொழிலாளர் குமுறல்', 'பிரான்சில், இடதுசாரிக் கட்சிகளுக்கு செல்வாக்கு', என்னும் செய்திகளை நாம் காண்கிறோம். இந்த விடுதலைப் போர், தொடர்ந்து நடைபெறும் காட்சியினை, இந்திய உபகண்டத்திலும் காண்கிறோம்.

மனிதனின், சுதந்திரங்கள், முற்றுப்பெறவில்லை.

அவன் ஆசையோடு போராடிப் பெற முயன்ற அந்தச் சுதந்திரம் ஒரு அத்தியாயத்தோடு நின்றுவிட்டது.

அந்த அத்தியாயத்தையும் சமுதாயத்தின் மேல்தட்டிலிருக்கும் பணக்காரர்கள், பறித்தெடுத்துக் கொண்டுவிட்டனர்.

இதனாலேயே, ஏழையர் உலகம், தாம் ஏமாந்த காட்சியை எண்ணி, ஆத்திரத்தோடு, ஆதிக்கக்காரர்களைப் பார்க்கிறது. அவர்களின் அடாபிடிகளை ஒழித்தெறிந்துவிட்டு தன்னுடைய அடிப்படை உரிமைகளைப் பெறும், முக்கியமான போராட்டத்தைப் பெற சுடர் முகம் தூக்கி, தோள் தட்டி, துணிந்து புறப்படுகிறது!

தனக்குள்ள எல்லா உரிமைகளை

யும் பெற்று, நல்லதோர் இலட்சி
பூமியை, அமைக்கவேண்டுமென்று
அறப்போரில் தொடர்ந்து ஈடுப
கிறது.

*

இந்த அறப்போர் செய்தி
நள்தோறும் காண்கிறோம்—நாடு
தோறும் காண்கிறோம். ஆனால், உ
கின் ஒரு பாகத்திலிருக்கும் ரஷ்
பூமியில் மட்டும், இந்த முறை
செய்திகளைக் காண முடியவி
அரசியல் மந்திரிகள் மாற்றம்—
சுத்தாதர் மாற்றம் — என்ப
போன்ற, செய்திகளைக் காண
றோமேயன்றி, தம்முடைய வி
தலைப்புரி பயணத்தைத் தொடர்
நடத்தும் தோழர்களைக் காணமுடி
யவில்லை, நம்மால். என்ன, கார
இதற்கு?

ஏனைய நாடுகள், தத்தமது வி
தலைத் திருநாட்களை நடாத்
போது, அங்கு வாழும் மக்கள் ம
தியில், மலர்ச்சியையும் மகிழ்ச்சி
யும் காண முடியாதபோது, ர
பூமியில் மட்டும் தமது விடுத
தினத்தை பூரிப்போடு கழிக்
மக்களைக் காண்கிறோம். ஏதனால்

சிந்தனைக்குரிய, சட்டம்—இ
ஏனைய நாடுகளைவிட வறுமை
பசியும், வாட்டமும், அதிகமா
பெற்றிருந்த, தேசம்—அ
ஆனால், இன்று அகமும் புறமு
குதூகலிக்க அங்குள்ள மக்
வாழ்கிறார்கள்!!

காரணம், அவர்கள்—விடுத
நூலின் முழு அத்தியாயங்களை
படித்து முடித்துவிட்டார்கள்.

அவர்களின் வெற்றி — பிறர்
குப் பயன்படவில்லை. அந்த வி
களையெல்லாம், அடைத்தெறிந்த பி
ஸ்தாபிக்கப்பட்டதே, அவர்
ராஜ்யமாகும்.

கல்லறையாக மாறிய அறப்போ
வீரர்களின் வரிசையில் நின்ற லெ
னும், ஸ்டாலினும், தம்முன்
விடுதலைப்போரில் வெற்றி பெ
றும்—வீணர்களாகி விட்டவி
ஏழை மக்களின் கண்ணீராக்கல
அவர்கள், அந்த மக்களுக்
ஆசை. அமைக்கும், மாபெ
முயற்சியிலீடுபட்டு வெற்றி பெ
றனர்.

அதனால் ஒவ்வொரு ரஷ்ய
தன்னுடைய அரசாங்கத்தைப்ப
என்னும்பொழுது, 'தன்னுடை

...த்து' என்று கருதுகிறான். ...தன் கீர்த்தியும் பெருமையும் ...னைச் சேர்ந்தது எனக் கருது ...ன்—அதன் மாட்சிக்குத் தன்னு ...ன்றளவு உழைக்கிறான்.

ஆனால், மற்ற நாடுகளில் அது, ... மக்கள்—அரசாங்கம் என் ...லே, அது பிறருடைய சொத்து— ...க்காரனும் பட்டாடோபக் கார ...ம் பங்குபோட்டுக் கொள்ளும் ...வஸ்து—என்று கருதுகிறார்கள். ...வே, அந்த அரசாங்கத்தைப் ...க்கும்பொழுது, அவர்கள் கண் ...ல் ஒளியில்லை! மாறாக ஆத்திர ...ம் அதிருப்தியும் தாண்டவமாடு ...றன! அதனாலேயே, அறப்போர் ...ட்சிகளும் அரும்புகின்றன!

இந்த அடிப்படையை அறிந்து ...ள்ளாத நமது காங்கிரஸ் ...மைச்சர்கள், எங்கு சென்றாலும், ...காஜனங்களே! சர்க்கார், உங்களு ...டைய! உங்களுடையதே சர்க் ...ர்! அதிருப்தி கொள்ளாதீர்கள். ...தோடு ஒத்துழையுங்கள்,'' ...ன்று வற்புறுத்திக் கூறுகிறார்கள். ...ரின் குரல் ஒலிக்க ஒலிக்க, ...கள் மனதில் சந்தேகம் தானே ...ரும்! இதனை மறந்து திரிகிறார் ...ள் இந்த மந்திரிகள்!!

*

36 ஆண்டுகளுக்கு முன், ரஷ்யா ...ல், விடுதலை அரும்பியது. அந்தத் ...தி, நவம்பர் 7—ஆகும். அந்த ...னை எண்ணும் போது, ரஷ்யர் ...ட்டுமல்ல, உலக மக்கள் அனை ...ரும் ஆனந்தமடைகிறார்கள். அந் ...ளவுக்கு இந்த 36 ஆண்டுக் கால ...ஷ்ய அரசாங்கம், உலகம் எண்ணி ...ம் பார்த்திராத அற்புதங்களைச் ...சாதித்திருக்கிறது.

ஆனந்தமடைகிறார்கள். அந்தள ...க்கு இந்த 36 ஆண்டுக்கால ரஷ்ய ...அரசாங்கம், உலகம் எண்ணியும் ...பார்த்திராத அற்புதங்களைச் சாதித் ...திருக்கிறது.

அத்தகைய சாதனைகளைத் தத் ...மது நாட்டில், பெறவேண்டுமென் ...தே, முற்போக்குக் கட்சிகளின் ...ஆசையாகும். அத்தகைய ஆசை ...தான், திராவிட முன்னேற்றக் கழ ...த்தின் இதயத்தில் கிடப்பது!

ரஷ்யா — அரசியல் வேடதாரி ...களுக்குச் சீட்டுக்கொடுத்து, பணக் ...கார முதலைகளை ஒழித்துக் கட்டி, ...மனிதனின் விடுதலை நாளின் எல்லா ...அத்தியாயங்களையும் முடித்துக் கட்டி, அவனுடைய தளைகளையெல்லாம் அறுத்து, புதுவாழ்வு பெற்றுத் தந்திருக்கிறது.

அத்தகைய புதுவாழ்வைத் திராவிடத்தில் காணமுயல்கிறோம் நாம். அதனால்தான், திராவிடத்தைப் பிடித்திருக்கும் எல்லா விலங்குகளையும் அறுத்தெறிய விரும்புகிறோம். மூடநம்பிக்கை — மதப்போதை — பொருளியல் விடுதலை — அரசியல் சுதந்திரம். ஆகியவைகளுக்காகப் பாடுபடுகிறோம்.

இந்த இலட்சியங்கள், சாதாரணமானவையல்ல! உள்நாட்டு மன்னன் கொடுமையையும், அரசியல் வேடதாரிகளின் வேஷத்தையும் களைந்தெறியும், வேலை மட்டுமே. ரஷ்யாவுக்கிருந்தது. ஆனால். திராவிடநாடு பெற விரும்பும் நமக்கோ, அவைகள் மட்டுமல்ல — வடநாடு, அந்நிய ஆதிக்கம் ஒன்றையும் ஒழிக்கும் மாபெரும் பொறுப்பிருக்கிறது.

இந்தப் பொறுப்பினை இங்குள்ள கம்யூனிஸ்டுகள் என்போர், ஏற்பதில்லை. எரிச்சலும் கொண்டு, இல்லாத கோபதாபங்களையும் சிருஷ்டிக்கும் வீண்முயற்சியில் ஈடுபடுகிறார்கள். இந்த 'டிரேட் மார்க்' வியாபாரத் துறையோடு இல்லாமல், அரசியல் துறையிலும் அதிகரிப்பது, ரஷ்யக் கம்யூனிஸ்டுச் சகோதரர்களைப்பற்றி நினைக்கும் இந்நேரத்தில் — நம் இதயத் திரையில் பளிச்சிடாமலில்லை.

எனினும், அவர்களது எண்ணங்களைத் திருப்பி, உலகத்தில் நடைபெறும் மனித விடுதலை நாளின் மற்ற அத்தியாயங்களை முடிக்கும் மாபெரும் பணியில் நாமும் தொடர்ந்து ஈடுபடுவோம் என்ற உறுதியினை, இந்த 'நவம்பர் 7' நன்னாளில் ஏற்போம்.

வாழ்க ரஷ்யா! வளர்க அதன் மணம்!!

*

தோழர்களே! உங்கள் பதில் என்ன?

*

தூத்துக்குடித் தோழர்கள்மீது
சாட்டியிருக்கும் குற்றப் பட்டியல்

96

சுமத்தப்பட்டிருக்கும் செக்ஷன்கள்

16

சதி வழக்கு சம்பந்தமாக
சர்க்கார் தரப்பு சாட்சியங்கள்

91

★

இதற்கு, உங்கள் பங்கு என்ன?

வழக்கு நிதிக்கு பணம் அனுப்பிவிட்டீர்களா? இன்றே அனுப்புங்கள்!

முகவரி:

அ. பொன்னம்பலம்,
'அறிவகம்', சென்னை-13.

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 8—11—53 [ஞாயிறு

பாவேயின் கண்டனம்

★

"ஏழை யென்றும்
அடிமையென்றும்
எவனுமில்லை—ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பர்
இந்தியாவில் இல்லையே"

என்று பாரதியாரின் பண்ணினைப் பாடாத—பாடிப் போற்றாத காங்கிரசார் எவரும் இருக்க முடியாது—இங்கு.

ஆனால், நாட்டிலே, ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லாத நிலை இன்றேனும் ஏற்பட்டிருக்கிறதா என்பதை, எக்காளத்தோடு அந்தப் பண்ணினைப் பாடும் காங்கிரஸ் தோழர்கள், எண்ணிப் பார்த்தார்களா? ஏன் அந்த நிலை ஏற்படவில்லை?

ஜாதியில் இழிவுகொண்ட மனிதரென்போர் இல்லாது ஒழிந்தனரா, இந்திய நாட்டில்?—நெஞ்சில் கை வைத்துச் சொல்லட்டும் நேர்மையில் நாட்டங்கொண்டுள்ள நமதருமைக் காங்கிரஸ் தோழர்கள்.

பாடுபடாது, பட்டு மெத்தையினில் படுத்து, பருகு பழரசவகைகளும், பவனிவரக் காரும் கொண்டுள்ள பணம் படைத்தோன்—'நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்தும், கையே தலையணையாய், கட்டாந் தரையே மெத்தையாய், காய்ந்த வயிறே தோழனாய்க் கொண்டு கஷ்டப்படும் பாட்டாளி பரிதாபகரமான வாழ்வு வாழ, நாம் மட்டும் மேனி குலுங்காது, படாடோபமாக வாழ்வது நேர்மைக்கு முரணானது, மனிதப் பண்பாட்டிற்கு அப்பாற்பட்டது' என்ற உணர்வு பெற்றானா? — இவர்களது ஆட்சியில்!

பல்லாயிரம் ஜாதிகளை ஏற்படுத்தி அதன் உச்சாணிக் கிளையினிலே உட்கார்ந்துகொண்டு, 'அவன்' எழுதியபடி யாவும் நடைபெறும்' என்று உபதேசம் புரியும் உன்மத்தர்கள் — 'மனிதருள் மற்றவர்களை இழிவுடன் நடத்துவது மாபெரும் துரோகம்' என்ற உணர்வினைப் பெற்றார்களா?

பண்ணினைப் பாடுவதும், அதைப் பாடியவரைப் போற்றிப் புகழ்வதும், அவருக்கு மண்டபங்கள் கட்டி விழாவினைக் கொண்டாடுவதும் மட்டும் போதுமா? அந்தப் பண்ணிசைக்கும் கருத்தில் நாட்டங்கொண்டு, நடைமுறையில் கொண்டுவர பாடுபடவேண்டாமா?

பாடுபட திறனில்லாவிட்டால், பாடுபடுபவர்களின் பாதைக்குக் குறுக்கே நின்று பாதகம் செய்யாமலாவது இருக்கவேண்டாமா?

அப்படியின்றி, 'அடிமை—ஆண்டான் என்ற நிலை ஏன்? சாஸ்திரி—சக்கிலி என்ற பாகுபாடு ஏன்?' — இவைகள் இல்லாதொழிந்தால் தான், இந்த நாடு எழில்மிக்க நாடாக மிளிரும், அந்த உணர்வினை எல்லோரும் பெறுங்கள்' — என, நாட்டு மக்களின் வாழ்வில் அக்கறை கொண்டு, அயராது பணியாற்றும் நம்மீது, தூற்றல் பாணங்களைச் சொரியும், தேசியத் திருக்கூட்டங்களின் நிலையினை நோக்கின், பரிதாபமே நமக்கு உண்டாகிறது.

"அடிமை—ஆண்டான் நிலையினை ஒழிக்க, நாங்களா, வழியேற்படுத்தவில்லை என்கிறீர்; பூதான இயக்கம் நாட்டிலே நடைபெறுகிறதே, அது, 'ஏழையென்றும் அடிமையென்றும், எவனும் இல்லாதொழிக்கவல்லவோ"—என்று அன்பர்கள், நமக்கு அறிவுறுத்துவர்.

பூதான இயக்கம் நடைபெறுவ
அறிவோம், நாம். பூதான இயக்
திற்கு எப்படிப்பட்ட நிலை
நிலம் படைத்த பிரபுக்கள் வழ
யிருக்கிறார்கள் என்பதை நாமு
மல்ல. அந்த இயக்கத்தை நடத்
ஆசார்யா விநோபாபாவே அறி
—உழுவதற்கு இலாயக்கற்ற—வி
வதற்கு ஏற்றதல்லாத — நிலத்
வழங்கியிருக்கிறார்கள் என்பதை

எனவேதான்,

"வாழ்க்கைப்பற்றிய த
உணர்வு மாறினால்தான் உண்
யான புரட்சி சாத்தியம்"

என்று விநோபாபாவே கூறுகி
உணர்வு மாறவேண்டும் என்கி
உணர்வு மாறினால்தான், உண்
யான புரட்சி சாத்தியமாகும் என்
குறிப்பிடுகிறார்.

புரட்சி, சமூக பொருளாதா
ஆகிய எல்லாத் துறைகளி
உள்ள குறைபாடுகளைப் போ
கோணலை நிமிர்த்த—குறைக
களைய—ஆணவத்தை அழிக்க—
மத்தை ஒழிக்க, அநீதியை வீழ்
—ஆபாசத்தைப் போக்கச் செய்
படும் துடிப்பான—விறுவிறுப்ப
—கஷ்ட நஷ்டத்தைப்பற்றிக் க
கொள்ளாமல் நடத்தப்படும் செ
அதனுடைய நோக்கம், முற்போ
கான முறையை அமைக்கவேண்
என்று இருந்தால்மட்டுமே, அ
வரவேற்கத்தக்க புரட்சிக
அறிவாளிகள் கொள்வர். அ
கைய புரட்சிக்கு, உணர்வு
வேண்டும் என்கிறார், பாவே.

அப்படி, அவர் குறிப்பிடு
லிருந்தே, தாராள உணர்வு
னும் மாறவில்லை என்று ந
புலப்படுகிறது.. அவர் மேலும்

"மனப்போக்கில் புரட்சி
மாறுதல்களின் விளைவாக
சமூக, பொருளாதாரப் பு
ஏற்படுகின்றன"

என்று குறிப்பிடுகிறார். ச
பொருளாதாரப் புரட்சி ஏ
வேண்டுமானால், மனப்போ
புரட்சிகர மாறுதல் ஏற்பட
டும் என்கிறார்.

இந்தப் புரட்சிகரமான மா
களைச் செய்யும் நம்மையோ, 'அ
துக்கட்டிவிடுவேன்' என ஓங்
கூச்சலிடுகிறார், ஆட்சியில் அ
துள்ள ஆச்சாரியார். ஆட்சி

அமர்ந்துகொண்டு, எப்படி எப்படி ராஜதந்திர நாடகம் நடத்தவேண்டும், யாருக்குத் தூபமிட்டு எவரிடம் வரம் கேட்கவேண்டும், சிரிப்பது எப்போது, சீறுவது எப்போது, சதி எப்படிப் புரிவது என்ற இவ்வகையான காரியங்களில் மட்டும் கவனத்தைச் செலுத்தினல் போதுமா? நாட்டு மக்களின் நிலையினை செம்மைப்படுத்தும் செயலினைச் செய்யவேண்டாமா? செய்பவர்களைத் தீர்த்துக் கட்டிவிடுகிறேன் என்று பயமுறுத்துவதாலேயே, பலன் கிடைத்துவிடுமா?

மனப்போக்கில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டால்தான் சமூக, பொருளாதாரப் புரட்சி ஏற்படும் என்று எடுத்துரைக்கும் பாவேயின் அறிவுரைக்கு, 'பாரதமாதாவின்' தலைப் புதல்வர்கள் என்ன பதிலைத் தரப்போகிருர்கள்.

பாவே, தான் செல்லும் பாதையில்—பூமிதான இயக்கத்தில்—எதிர்பார்த்த பலன் தராது போகவே தான், உணர்வு மாறவேண்டும் என்கிறார்.

பூமிதான இயக்கம் குறித்து தோழர்கள் கூறியபோதெல்லாம், இதையேதான் நாம் எடுத்துச் சொன்னேம். என்றாலும், புறக்கணிக்கப்பட்டோம். அந்தப் பாதை புகுந்த பாவே இன்று கூறுகிறார், உணர்வு மாறவேண்டும் என்று.

பாவே செல்லும் பாதை பலன் தராது என்று அறிந்ததாலேயே தான், மக்கள் மனதில் ஓர் மாறுதலை ஏற்படுத்தி புரட்சி உண்டாக்க பாதியில், அசோக்மேத்தா ஆகியோர், பாட்டாளிகளை நிலம் நோக்கி அழைத்துச் சென்றனர்.

ஆனல், 'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை' என்று பண்ணிசைத்த பண்பாளர்கள்—அசோக் மேத்தா ஆகியோருக்கு, 18-மாத சிறைத்தண்டனையும், 50-ரூபாய் அபராதமும் விதித்திருக்கிருர்கள்.

'தனிப்பட்ட ஒருவனுக்கு, தேவைக்குமேல் நிலம் ஏன்?'— என்று சென்ற தோழர்களுக்குத் தண்டனை!

உரிமைக் கீதம் எழுப்பி, உணர்வு மாற்றத்தை உண்டாக்கச் சென்றவர்களுக்குத் தண்டனை!

பாவேயின் கொள்கையை நடைமுறையில் நடத்திக் காட்டவேண்டும் என்று பாடுபட்டவர்களுக்குத் தண்டனை!

'பாடுபடுபவர்களுக்கே நிலம் வேண்டும்' என்று பாரதிர முழக்கமிட்ட பாரத புத்திரர்கள் ஆட்சியில், பாடுபடும் பாட்டாளிகளை நிலம் நோக்கி அழைத்துச் சென்றதற்காக, தண்டனை!

விசித்திரம்!—வேதனை கலந்த விசித்திரம்!

தண்டனையை அளித்துவிடுவது, சுலபம் — ஆனல், அவர்கள் கொண்ட கொள்கையினை என்றும் அழிக்கமுடியாது!

பாவேயின் கொள்கையினைப் போற்றிப் புகழ்வோர் — அந்தக் கொள்கையினை நிலைநாட்டப் பாடுபட்டவர்களுக்கு அளித்திருக்கும் 'பரிசு' 18-மாத சிறைவாசம்!

"5 அல்லது 10 ஏகராவுக்கு மேல் வைத்திருப்பனை, இரண்டாவது தாரம்கொண்டவனைப் போல சமூகம் கண்டிக்கவேண்டும்"

என்று விநோபாபாவே கூறுகிருர். அவர் கூறுகிறபடி, 10-ஏகராவுக்கு மேல் வைத்திருப்பவனைக் கண்டிக்கும் வகையில் காலடிவைத்தவர்களுக்குக் கடுந்தண்டனை!

கொள்கையினைக் கூறும்பொழுது குதூகலிக்கும் தோழர்கள், அந்தக் கொள்கையினை நிலைநாட்டப் பாடுபடும்பொழுது, பதைப்பதேன்?—பாடுபடுபவர்களுக்குப் பாதகத்தை விளைவிப்பதேன்?

இந்த விசித்திர விநோதர்களை எண்ணினல், விலாநோகச் சிரிக்கத் தோன்றுகிறது! இந்த விவேகிகள் தான், சமுதாயத் துறையிலேயும், பொருளாதாரத் துறையிலேயும் மக்கள் மனதிலே புரட்சிகர மாறுதல்கள் ஏற்படவேண்டும் என பாடுபடும் நம்மை 'ஒழித்துக் கட்டப் போகிருர்களாம்.'

நாட்டு மக்களிடத்திலே நல்லதோர் மாற்றம் தேவை — உணர்வு தேவை—அதனல் உயர்வு தேவை— என்று பாடுபடும் நம்மைத் தீர்த்துக்கட்டப்போவதாகக் கூறித் திரியும் இந்தப் பாரத புத்திரர்களின் சொல்லும் செயலும், செல்லும் சீர்கெட்ட பாதையைக் கண்டு நகையாதார் இல்லை.

இவர்களின் செயலை,

"இன்றைய சீர்கேட்ட சமூக அமைப்பில் பணத்தைக்கொண்டு தான் திறமைக்கு எடைபோடப்படுகிறது. மிக உயரிய பதவியை வகிப்பதால், ஜனாதிபதிக்கு அதிக சம்பளம் தரப்படுகிறது. மக்களின் முதல் சேவகர், அவரது சேவைக்கு பேர், புகழ், அபிமானம் முழுவதையும் பெறட்டும். அவருக்கு அதிகப்படியான சம்பளம் கொடுப்பானேன்?"

என்று கூறி, பாவே கண்டிக்கிருர்.

"காகமும் கழுகும், நாயும் நரியும், ஓர் நாள் சுற்றித் தின்னப் போகும் சோற்றுத்துருத்தியப்பா, இது! ஒன்பது வாசல் இந்த வீட்டுக்கு! இரண்டு கால்! எதற்கு இந்த வீடு பயன்படுகிறது? காமவேள் இதனை நடனசாலையாகக் கொள்கிருன்! மும்மலக் கேணி! போக போகம் திணிக்கப்பட்ட பெட்டி! கணக்கற்ற கிருமிகள் மொய்த்துக் கொண்டிருக்கும் குப்பை! பிரமனெனும் குயவன் செய்த மட்கலம்! எமனெனும் தடிகாரன் அடித்து நொறுக்கப்போகும் பாண்டம்!" என்று பேசிடும் ஆண்டி, அந்தி வேளையிலே, யாருமறியாமல் மது அருந்தப்போவதும், இரவிலே, இன்பவல்லிகளைத் தேடுவதுமாக இருக்கும் வேடிக்கைபோல், 'நாங்கள் பொறுப்பேற்பது, பணத்துக்காக அல்ல! வெள்ளைக்காரன் பெறும் கொள்ளைச் சம்பளம் எங்களுக்கேன்? சுயராஜ்யம் பெறுவது தான் எங்கள் நோக்கம்' என்று பேசிய கூட்டம், 'இவ்வளவு சம்பளம் தேவைதான்; அந்தஸ்துக்குத் தக்கவாறு செலவினங்கள் இல்லையா' என்று பணத்துக்காக பல்லிளிக்கும் காட்சியை, இன்று நாம் காண்கிறேம். இந்தக் காட்சியைக் கண்டு தான், பாவே, பதைத்துக் கேட்கிருர், 'அதிகப்படியான சம்பளம் கொடுப்பானேன்?' என்று.

அதிகப்படியான சம்பளம் பெறுவது ஏன் என்று நாம் கேட்டபொழுது தரையில்விடப்பட்ட மீனைப்போலத் துள்ளிக்குதித்து, சீறும் நாகம்போல ஆடிய சீலர்கள், பாவேயின் கண்டனத்துக்கு என்ன பதில் தருவார்கள்?

இதனல்தான், தாராள உணர்வு

மாறினால்தான் உண்மையான சமூக பொருளாதார புரட்சி ஏற்பட முடியும் என பாவே கூறுகிறார்.

இந்த உணர்வு, காங்கிரஸ் தலைவர்களுக்கே உண்டாகவில்லை என்பதை எடுத்துரைக்கவும் அவர் தவறவில்லை.

எனவே, சமூக, பொருளாதார மாற்றம் வேண்டும் எனக் காங்கிரஸ்காரர்கள் கூறித் திரிவதெல்லாம், வாயளவில்தான் என்று, பாவே பறைசாற்றுகிறார்.

கொள்கையைக் குழிதோண்டிப் புதைக்கும் இந்தக் கோலோச்சிகள், நாட்டை நாசபாதைக்கு அழைத்துச் செல்லும் நாசகாலர்கள், நம்மை சமூக விரோதிகள் என்கிறார்கள்.

மக்கள் மனதிலே உணர்வினை உண்டாக்கும் நம்மை ஒழித்துக் கட்டப்போவதாகக் கூறிக்கொள்ளும் இவர்களை, மக்கள் உணர்வு பெற்று, உதறித்தள்ளும் காலம், வெகு விரைவில் வந்துவிட்டது. என்பதை உணர்ந்துகொள்ளவில்லை.

உணர்ந்துகொள்ளாத காரணத்தால்தான், உணர்வினைப் பெருக்கி— உண்மை நிலையினை உணர்த்தும், நம்மை ஒழித்துக்கட்டுவதாகக் கூறித் திரிகிறார்கள்—சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு பாடுபடும் நம்மை, ஏளனப்படுத்துகிறார்கள்.

ஆனால், பாவே, இவர்களைப் பார்த்து, 'தாராள உணர்வை மாற்றிக்கொள்ளுங்கள்: கொள்ளைச் சம்பளம் பெறுகிறீர்கள்!'—என்று கண்டனக் குரல் எழுப்புகிறார்.

பாவேயின் கண்டனக் குரலைக் கேட்ட பிறகாவது, பாரதபுத்திரர்களின் கண்கள் திறக்குமா?

'பழைய பத்திரிகை'

உலகத்திலேயே மிகப் பழைய பத்திரிகை, எது தெரியுமா?

ஆஸ்திரியாவிலிருக்கும் 'வியனர் சூடங்' எனும் இதழ்தான்! வியன்னா நகரிலிருந்து வெளியாகும் மேற்படி இதழ் அண்மையில், தன்னுடைய 250வது ஆண்டு விழாவைக் கொண்டாடியிருக்கிறது. 1703-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்த இதழ், இதுவரையில் நின்றதேயில்லையாம். ஆனால் ஆஸ்திரியா ஜெர்மானியர் வசமாகிக் கிடந்தபோது, ஏழாண்டு காலம் தடை செய்யப்பட்டுக் கிடந்ததாம்.

இந்த 'இதழின் நேர்மை' குறித்து, பின்கண்டவாறு, கூறப்படுகிறது. மாவீரன் நெப்போலியன் ஆஸ்திரியாவிலிருக்கும் ஆஸ்பரின் என்னுமிடத்தில், முதன் முதலாகப் போரில் தோற்றான். இதைக்கண்ட பிரெஞ்சுக்காரர்கள், தாங்கள் போரில் ஜெயித்ததாகப் பத்திரிகையில் வெளியிடுமாறு, இந்த இதழின் ஆசிரியரிடம் சொன்னார்களாம். 'சரி' என ஒப்புக்கொண்ட ஆசிரியர், தன்னுடைய எழுத்துக் குவிப்புகளுக்கிடையே, 'உண்மை'யையும் இலைமறை காயாக, எழுதிவிட்டாராம். இங்ஙனம் எழுதிவிட்டு உயிரை எண்ணி, ஓடித் தப்பித்தாராம்!

பயப்படாதே

மனித சமுதாயத்தினிடையே இன்று தோன்றியுள்ள துன்பங்களுக்கும், விபத்துகளுக்கும், காரணம், பயமேயாகும்.

பண்டைய நாட்களில் மனிதன் பயத்தால் ஆளப்பட்டுவந்தான். பயமே அவனுக்கு எஜமானனாயிருந்தது. பயத்தைக்காட்டி மிரட்டி ஒருவனை எப்படி வேண்டுமானாலும் ஆட்டி வைக்கலாம் என்பதை உணர்ந்து கொண்டார்கள். இதை நல்வழியிலும் தீய வழியிலும் பயன்படுத்திக்கொண்டார்கள்.

பயத்தின் வளர்ச்சியே மதம் எனப்படுவதாகும். பயத்தின் அஸ்திவாரத்தின்மீது கட்டப்படாத மதம் உலகிலே ஒன்றுமே இல்லை. பழைய காலத்தில் வணங்குகிறவர்களைக், குருமார்கள் பூசாரிகள் சொன்னபடி நடக்காவிட்டால், பயமாகிய மருந்தை அவர்களுக்கு ஊட்டிவிடுவார்கள்.

தர்க்கத்தில் கவைக்குதவாத பயத்தைக்கொண்டு பூசாரிகள், குருக்கள் காட்டுமிராண்டிகளைப் பயமுறுத்தி தண்டித்துவந்தார்கள் என்பதைக்கண்டு ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

பயத்தை எதிர்க்கும் சக்தியைப் பழக்கத்தை ஒழிக்கவே வேண்டும் என்றும், பகுத்தறிவை உபயோகப்படுத்தியே எதையும் செய்யவேண்டும் என்றும் சொல்லும்போது தான், சொல்லுகிறவன் மனித துரோகியாகிவிடுகிறான். அதிலும் மத விஷயமாகக் கற்பிக்கப்பட்டிருக்கும் பயத்தை எதிர்த்தால் பெரிய துரோகியாகிவிடுகிறான்.

ஆகவே பெற்றோர்களும் ஆசிரியர்களும் கற்கவேண்டியன ஏராளமாயிருக்கின்றன.

சிறுவர்களைச் சரியான வழியிலே கற்பிக்கவும் வளர்க்கவும் வேண்டிய பொறுப்புகள் அறிந்தால்தான், மனித சமூகம் விடுதலையடைய முடியும். ஒரு அதிகாரியின் துப்பாக்கி எவ்வாறு பயத்தை அளிக்கிறதோ, அதேபோல் பயமும் ஒருவனை அஞ்சச் செய்கிறது.

நாம் ஏன் சிறுவர்களையும் சிறுமிகளையும் பழக்குகிறோம்? அவர்கள் சுகமாக அறிவோடு வாழவேண்டும் என்ற எண்ணத்தினால்தானே! அப்படியானால், அதற்குப் பயம் அவசியமே இல்லை. நமது திட்டத்திலே பயத்துக்கு இடங் கொடுக்கவேண்டியதில்லை. ஒவ்வொன்றுக்கும் காரண காரியத்தைச் சொல்லியே நல்வழிப்படுத்திவிடலாம்.

[W· H வில்லியம்சன்]

வருந்துகிறோம்

திராவிடநாடு அலுவலகத் தோழர் ஆர். கே. மூர்த்தியின் சிறிய தந்தை அருணாசலம், 3—11—53-ல் இயற்கையெய்தின செய்தி கேட்டு வருந்துகிறோம். சிறிய தந்தையை இழந்து தவிக்கும் தோழருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் நம் ஆழ்ந்த ஆறுதல் உரித்தாகுக.

*

பிரபல நாடக அமைப்பாளரும், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியின் நாடக சபாவின் மானேஜராயிருந்தவருமான தோழர் பி. வி. எத்திராஜ் அவர்கள் கடந்த 29—10—53 அன்று மாலை 6-மணிக்கு காலமானார் எனும் செய்தி கேட்க மிகவும் வருந்துகிறோம். அவருடைய குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் நமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

குமரி முதல் இமயம் வரை

குமுறுகிறது, எரிமலை!

பலர் கைது

துப்பாக்கியால் சுட்டனர்

உயிர்கள்—பலி

உண்ணாவிரதப்போர் மாகாண முழுமையும் பரவுகிறது

கல்லூரிகள் மூடப்படுகின்றன

கடைகள் நாசம்! கலவரம் எங்கும்

தந்திகள் அறுக்கப்பட்டன

*

அகில உலக ஜோதியாம் பண்டித நேருவின், சொந்த மாகாணமாம், ஐக்கிய மாகாணத்தில், கடந்த சில நாட்களாக், நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள் இவை.

இவைகளில் ஈடுபடுவோர், அனைவரும், தொழிலாளர்களல்ல—அரசியல் கட்சிக்காரர்களல்ல — கல்லூரி மாணவர்கள்.

மாணவர்கள் மூட்டிய தீ, அம்மாகாணமெங்கும் பரவுகிறதாம்! பரபரப்பான செய்திகளைப் பத்திரிகைகள் குவித்துக் கொண்டிருக்கின்றன!!

*

இந்த நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்ற பண்டிதநேரு அவர்கள், சமரசம் செய்துவைக்கும் சாந்தமான காரியங்களைச் செய்துவைக்கப்போவதாக, அறிவிக்கவில்லை. 'மாணாக்கரே! மதியயில் கல்லூரி பயில்வோரே!' என்றழைத்து, புத்திமதி போதிக்கவில்லை. அதற்குப் பதிலாக, ஆத்திரத்தோடு, கனல் கக்கப் பேசியிருக்கிறார்.

"ஒருகை பார்க்கப்போகிறேன்!"—இந்தக் கோஷங்களைக் கேட்ட பண்டிதர், அளித்த, பதில், இது.

மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை, ஒரு கை பார்க்கப்போகிறாராம்.

பண்டிதர் அவர்களுக்கு இன்று, எதை எடுத்தாலும் 'ஒரு கை பார்க்கவே' ஆசையாயிருக்கிறதுபோலும். ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் அவருக்கு, கல்லூரி மாணவர்கள் செய்யும் முறைகள், நிச்சயம் உபத்திரவமானதாகவே தோன்றும் அவர்கள் விளைவிக்கும் 'ஆபத்து'களை—அவரல்ல — எவருமே, மாறுவேற்று, வாழ்த்துரை வழங்கார். ஆனால், அந்த 'ஆபத்து'களை தடுப்பதற்குள்ள வழியென்ன? இதுவா! இப்படிப் பேசுவதா!

'ஒருகை பார்க்கப் போகிறேன்!'—எதற்கெடுத்தாலும், இவ்விதம், ஆத்திரமான வார்த்தையை வீசுமளவுக்கு, பண்டிதருக்கு ஏறியிருக்கும் அதிகாரப் போதையைக் காண்போர், நிச்சயம், பரிதாபப்படுவர். எதைக் கேட்டாலும்—எந்த நிகழ்ச்சியைப்பற்றிச் சொன்னாலும்—'இவர்களை விட்டுவைக்கக்கூடாது—ஒருகை பார்க்கப்போகிறேன்' என்றால், இவர் ஆட்சியில், 'ஒருகை பார்க்காமல்' யாரைத்தான் விட்டு வைக்கப் போகிறாரோ! தெரியவில்லை.

உல்லாசத் தென்றலும், அங்கே சந்தன மணமும், மலர் மெத்தையும், மனமகிழ்விக்கும் கீதமும், விளைவிப்பதாகவா, இருக்கிறது, அவரது ஆட்சி. இல்லையே! அவருக்குமட்டுமல்ல, நாட்டுக்கும், 'அவருடைய போக்கு' எவ்வளவு தீமையைச் சொரிகிறது! இந்த ஆறாண்டுகால அவரது ஆட்சியில், இமயமுதல் குமரிவரை, எதனைக் காண்கிறோம்? தென்றலா? அல்ல, அல்ல—தீ, ஜ்வாலை! சந்தனமணமா? இல்லை, இல்லை—சாவுநாற்றம்!! ஒற்றுமை நாதமா ஒலிக்கிறது? — ஓரிடத்திலும், காணமுடியவில்லை! இருந்தும், இவ்வண்ணம், பேசிவருகிறார்.

இத்தகைய பேச்சால், இன்று வளர்ந்துள்ள நிலை என்ன? நிந்தைக்கல்ல, இவைகளைக் குறிப்பிடுவது, சிந்தனைக்கு.

குமரி முதல் இமயம்வரை, கொஞ்சம், பயணம் கிளம்புங்கள்.

*

திருவாங்கூரில்

தென்றலா, வீசுகிறது? ஜனநாயகம் வெட்டிப் புதைக்கப்பட்டு, 'காபந்து' சர்க்கார் இயங்கிக்கொண்டிருக்கிறது. பொதுத் தேர்தல்கள் நடந்து ஆண்டு இரண்டாகவில்லை. அதற்குள் இன்னொரு தேர்தல், நடத்தப்படுகிறது. காங்கிரஸ் ஆட்சி கவிழ்க்கப்பட்டுவிட்டது! மக்களின் குரலை மதிக்கவில்லை. நிலைமை மோசம். நீதி, கண்டு சிரிக்கிறது, இவர்களை.

சென்னை

நிலைமைகளை, விளக்கவேண்டியதில்லை. நீங்களே அறிவீர்கள்.

ஆந்திரம்

எப்படியாவது காங்கிரஸ் போர்வையில் மந்திரிசபை அமைந்தால் போதுமென்று பிரகாசத்தைப் பிடித்துஉட்காரவைத்தனர். பலரை மந்திரியாகவும் ஆக்கியிருக்கின்றனர்—பலம் தேட. ஆனால், அரும்பிய நாள் முதல் அந்த மந்திரிசபை என்று கருகிடுமோ? எனும், நிலைமையே, வளர்ந்து வருகிறது. சர்க்கார் கட்சிக்கு ஆதரவில்லை. சஞ்சலமும் சங்கடமும் அலைமோதிக் கிடக்கிறது, ஆந்திரம்.

மைசூர்

முதல் மந்திரிக்கும் — காங்கிரஸ் தலைவருக்கும் ஏற்பட்ட சண்டை தீரவில்லை. உள்பூசல், வளர்ந்துவருகிறது. எப்போது வெடிக்குமோ! என்ன ஆகுமோ!—என்ற கலக்கம் இன்னும் தீர்ந்தபாடில்லை. டில்லிக்கும் மைசூருக்கும், கடிதப்போக்குவரத்து, நடந்தபடியே இருக்கிறது.

ஐதராபாத்

இங்குள்ள ஆட்சியின் விஷயங்கள், அம்பலமேறி, சிரிப்பாய்ச்சிரிப்பதை அறிவர், எல்லோரும். அங்

குள்ள காங்கிரசாட்சி நீடித்தால், தாங்கள் எம். எல். ஏ. பதவிகளை விட்டு விலகி விடுவதாக, காங்கிரஸ்காரர்கள் கூறிவருகின்றனர். அங்கு வளர்ந்த குழப்பம், அடங்கியபாடில்லை. அந்த ஆட்சியும் அல்லாடுகிறது!

கன்னடம்

இந்தப் பெயரில் தனி மாகாண ஆட்சி இல்லையே தவிர, இங்குள்ள காங்கிரஸ் கட்சி, நேருவின் சென்னை விஜயத்துக்குப்பிறகு, நெருப்பாகிக் கிடக்கிறது. 'மொழிவழி மாகாணக் கோரிக்கை கூடாதென்று, பேசினாரல்லவா, நேரு? அதைக் கேட்ட கன்னட காங்கிரஸ் கமிட்டி நேரடி நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கர்ஜித்திருக்கிறது. தான் ஆத்திரத்தால் சிந்திய வார்த்தைகள் தரும் விபரீதத்தைக் கண்ட பண்டிதர், அவர்களுடன் கடிதப் போக்குவரத்து துவங்கியிருக்கிறார். எனினும், விரைவில் கன்னட மாகாணம் அமைக்கப்படாவிடில், விளைவு விபரீதமாகுமெனக் கன்னடியர் கர்ஜிக்கின்றனர்.

மராட்டியம்

பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த மராட்டிய மக்கள், தமக்கோர் தனி மாகாணம் கோருகின்றனர். தம்முடைய மாகாணத்தில் பம்பாய் நகரம் இருக்கவேண்டுமெனவும்கூறுகின்றனர். இது சம்பந்தமாக பம்பாய் மாகாண காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே குடுமிபிடிச் சண்டை நடந்துகொண்டிருக்கிறது.

பம்பாய்

இங்கே ஆட்சி நடத்துவோர், நேருகட்சி, காங்கிரஸ் தலைவர் நேருவை எதிர்க்கும் கட்சி என்று இரண்டு கட்சிகளாகப் பிரிந்துகிடக்கிறது. பம்பாய் மாகாணக் காங்கிரஸ் தலைவர் பண்டிதநேருவையும் மாகாண ஆட்சியையும் பொது மேடைகளில் வெளிப்படையாகக் கண்டித்து வருகிறார்.

ஒரிஸ்ஸா

முன்பு மத்ய மந்திரியாக இருந்தவரும் காங்கிரஸ் காரியதரிசியாக இருந்தவருமான ஹரிகிருஷ்ண மேதாபுக்கும், ஒரிஸ்ஸா சர்க்காருக்குமிடையே தகராறுகள் அதிகமாகியவண்ணம் உள்ளன. மேதாப், பண்டித நேருவையும் அவரது ஆட்சியையும் கண்டித்துப் பேசத் தலைப்பட்டுள்ளார்.

பீகார்

பீகாரின் நிலவரம் இரண்டு தினங்களுக்கு முன்னர் பீகார் சென்றிருந்த பண்டிதநேரு வாயாலேயே வெளிப்பட்டிருக்கிறது. 'வகுப்புத்துவேஷம்', 'ஜாதிய எண்ணம்' என்று பேசப்படும்பொழுதெல்லாம், சென்னை மாகாணத்தில் மட்டுமே இவை இருப்பதாகத் தோன்றும். ஆனால், பீகாரில் 'ஜாதீயம்' (Casteism) தலைவிரித்தாடுகிறது! இந்த ஜாதீயவாதிகளின் போக்கை 'ஒரு கை பார்க்கப் போவதாக' அங்கு பேசிய நேரு, வெளியிட்டிருக்கிறார்!

வங்கம்

தியாகச் சிற்பிகளைத் தந்த வங்கம், மறைந்த டாக்டர் மூகர்ஜிக்குப் பிறகு, டில்லியின் போக்கில் அடங்காத ஆத்திரம் கொண்டு கிடக்கிறது. சமீபத்தில் காங்கிரஸ் சர்க்காரின் பிடிவாதப் போக்கை எதிர்த்து மக்கள் நடாத்திய அறப்போர்களும் அதன் விளைவாக ஆட்சியாளர் நடத்திய துப்பாக்கித் துரைத்தனமும், அதனால் பலர் மாண்டதையும், உலகு அறியும். அந்த அதிருப்தி, பெருவாரியாகப் பரவி வருகிறது.

பஞ்சாப்

'சீக்கிஸ்தான்' தேவை என்று முழக்கமிடும் தாராசிங், தமது தொண்டர்களுடன், டில்லியின்மீது 'படை' எடுக்கப்போவதாக அறிவித்துள்ளார். இப்படையெடுப்பு, அகிம்சா முறையில் நடத்தப்படுமாம். அங்கும் மந்திரிசபைகுறித்து ஏராளமான தகராறுகள் மோதிக்கொண்டே உள்ளன.

அஸ்ஸாம்

அங்கு வாழும் நாகர்கள், கடந்த பல ஆண்டுகளாக, 'நாகநாடு' கோரி கிளர்ச்சி செய்து வருவதையும், அதுபற்றி கண்டித நேரு கூறிய வார்த்தைகளையும், யாவரும் அறிவர். அங்கு, நாகமக்களின் குரல், வளர்ந்து வருகிறது.

காஷ்மீரம்

கேட்கவேண்டாம், இந்த இடத்தைப்பற்றி! நமது வரிப்பணம் வீணாகிக்கொண்டிருக்கிறது. கடைசியாக வந்த தகவல்படி, மந்திரி தியாகி, வெளியிட்டுள்ளாராம்:- 'பாகிஸ்தான் துருப்புகள் காஷ்மீரத்தை விட்டு வெளியேறினால்கூட, இந்தியப் படைகள் அங்கே தங்கியிருக்கும்,' என்பதாக. எனவே, நிலைமை, இன்னும் சீர்குலையுமே தவிர, வேறில்லை. பண்டிதரின் தோழர் அப்துல்லா, சிறையில் கிடக்கிறார்.

'சமஸ்தானங்கள்'

'சி'பிரிவு ராஜ்யங்களென அழைக்கப்படும் இந்த சுதேச சமஸ்தானங்கள் பலவற்றில், மக்களின் உரிமைக்குரல், அதிவேகமாக ஒலித்து வருகிறது. இந்த சிற்றரசர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 'மான்யத்தொகை'யில் ஒரு சிறிது குறைத்துக்கொள்ளுமாறு கோரி பண்டித நேரு இரகசிய சுற்றறிக்கை அனுப்பினாராம். அவர்கள் எவரும், அதனை லட்சியம் செய்யவில்லையாம். மதோன்மத்த நிலையிலிருக்கும் அவர்கள் போக்கு, ஆங்காங்கே, வளர்ந்துவரும் விவசாயிகள் போராட்டத்தை அதிகமாக்கிக் கொண்டிருக்கிறது.

*

பயணம் சென்றீர்களா? இப்பயணத்தில், இன்னும் குறிப்பிடாமல் விடப்பட்ட, விஷயங்கள் ஏராளம் இருக்கின்றன! இதுபோல, எங்கு போனாலும், 'எரிமலை'களை வைத்துக்கொண்டிருக்கும் பண்டிதநேரு, யாரைப் பார்த்தாலும், 'ஒரு கை பார்க்கப் போகிறேன்' என்றே பதிலளித்தவண்ணம் இருக்கிறார்.

இதனால், தன்னுடைய அதிகாரச் செல்வாக்கு கண்டு அஞ்சி, அவரவர்கள் பொந்து தேடி பதுங்கிவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்.

இவ்விதம், இவர் கர்ஜிப்பதால், துப்பாக்கிக்கும் தடியடிக்கும் இந்த உலகில் வாழவேண்டிய உயிர்கள், நாசமாகிக்கொண்டிருக்கின்றன!

'ஒரு கை பார்க்கப்போகிறேன்' என்றால, இந்த நாசக்குவியலை அதிகமாக்குவேன்—எதிர்த்தோரையெல்லாம் பிணமாக்குவேன்—என்பதுதானே பொருள்.

தான், உட்கார்ந்திருப்பதே, எரிமலையில்! அதனை உணராது, ஆர்ப்பரிக்கும் இந்த 'ஐயோ பாபத்'துக்கு யாரை உதாரணமாகக் கூறுவது!!

★

சுடர்விடும் 'ஜோதி'

தோழர்காள்! சுடர்முகம் தூக்குமின்!

தூய இதயம், துடிக்கும் சிந்தை—
விழலுக்கிறைத்த நீராகிவிடாது.
'அறிவே துணை'யெனும் விடுதலை முழக்கம்,
அரசின் கொடுமையைப் பொடிப்பொடியாக்கும்!!

கொடுங்கோல் சட்டம், கோரத்தடைகள்,
உமது சிறுசொல்முன், சிதறிச்சாயும்!
வாளும் வேலும் வதைக்கும் பீரங்கியும்,
சுதந்திர இதயத்தை என்ன செய்யும்?

அரசின் கொடுமைகள் ஆர்ப்பரிக்கட்டும்.
அதனாலென்ன? அஞ்சுமோ, உம் உள்ளம்!
எத்தனைப்பெரிய இலட்சிய வீரர்கள்,
இழந்தனர் வாழ்வை—இந்த நற்பாதையில்!

ஏறு! முன்னேறுவீர்! என்றும் முன்னேறுவீர்!
இன்று உம்மை எள்ளி நகையாடி,
சுதந்திரப்போரில் 'காணிக்கை' செலுத்தி,
தமது பங்கைத் தந்திடத் தவறும்,
தாயகத் தோழர்கள்—உமது சகோதரர்கள்,
விரைவில் உம்மை, விரைந்து அணைத்து
அகமகிழும் காட்சி, அதோ! நெருங்குகிறது.
அது உறுதி.

சுதந்திர இதயமே! சுடர்முகம் தூக்கு!
துணிந்து பணிசெய்! தோள்தட்டு! புறப்படு!!

*

'சுதந்திர இதயமே' என்றழைத்து, ஆங்கிலக் கவிஞர் விட்டியர் என்பார், இவ்வாறு அழகுவல்லொன்று விடுத்துள்ளார்.

நமக்காக அல்ல. நாம் நடைபோடும் விடுதலைப் பாதையில், சுதந்திரபுரி நோக்கிச்செல்லும் 'இலட்சிய இதயங்களை'ப்பார்த்து, பரவசத்தோடு, தீட்டப்பட்ட கவிதை— அது.

மின்னும் பொருளழகைப் பாருங்கள்!

"எது தடுத்தால், என்ன?-சுயேச்சைக்காகப் போராடும் ஒரு மனிதனின் தூய இதயத்திலிருந்து புறப்படும் ஒரு சிறு சொல்லுக்கு, ஈடு இணையுண்டோ, இவ்வுலகில்!"— என்று கேட்கிறார், கவிஞர்.

விடுதலைக்காகப் போராடும் இதயங்களிலிருந்து கிளம்பும் சொல், அவ்வளவு வீரத்தைப் பெற்றுள்ளதாம். அது, தூய்மையான உள்ளத்திலிருந்து கிளம்புவதால், அதற்குச் சமமானது வேறெதுவும் இல்லையாம், இந்த உலகத்தில். துப்பாக்கிகளுக்கு மிரளாது — துரைத்தனத்தின் மிரட்டலைத் தூசென மதிக்கும்—துணிவும் பெருமிதமும் கொண்டு தொண்டு புரியத் தூண்டும். சொல்கிறார், கவிஞர்.

உண்மைதான்—கவிஞரின் உள்ளத்தை, விடுதலைப் பாதையில் நடைபோடும் வீரர்கள், நன்கறிய முடியும் குளிர்நிழற் சோலையும், கொவ்வைக் கிளியும், கொஞ்சிடும் கோதையரும்—ரத்ன மஞ்சமும் சப்ரகுஞ்சமும் பெற்று, களிநடனம் புரியும் கனவான்களும் சுதந்திரத் துரோகிகளும், அதனை, அறிய முடியாது.

'எனக்கு விடுதலை வேண்டும்!' —எனும் நற்போரிலீடுபடுவோரை, எதுவும், தடுப்பதில்லை. வயது கொஞ்சமா! பரவாயில்லை. வயோதிகராயினும் வாலிபர்களாயினும், ஆணாயினும் பெண்ணாயினும்' மாணவ மலர்களாயினும் ஆசிரியச் சோலைகளானாலும், அந்தப் போரில், தோளோடு தோளிணைந்து ஈடுபடுகின்றனர். அந்தஸ்து, குறுக்கே நிற்பதில்லை.

இவ்வளவு உயரம் தேவை—இத்தனை 'பவுண்டு' எடையிருக்கவேண்டும்—இவ்வளவு படித்திருக்கவேண்டும்—உடல் இளைத்திருப்பது கூடாது — பணமில்லாமலிருப்பது ஒரு குறை—இவ்வித குணதிசயங்களெதுவும், வரையறுக்கப்படுவதில்லை, இந்த அறப்போரிலீடுபடும் தொண்டர்களுக்கு.

ஏனெனில் இது, அவர்கள் காரியம்! இந்த நற்போர், அவர்களுக்குச் சொந்தமான உரிமையைப் பெறுவதற்காக நடத்தப்படுவதாகும்.

அதனால்தான், இந்த இலட்சிய வீரர்களின் பணியினைத் தடுக்க எதனாலும் முடியாதென்கிறார், கவிஞர் எது நேர்ந்தாலென்ன?— எதுவும் உங்கள் தூய்மையான இதயத்தைத் துளைத்திடவும்முடியாது!— என்று தோள் தட்டுகிறார். சுடர் முகம் தூக்கு! துணிந்து பணிசெய்! தோள்தட்டு! புறப்படு!—என்று, முரசறைகிறார்.

*

"விடுதலை! விடுதலை!!"—என்ற முழக்கத்தோடு, மனிதன் பிறந்த கால முதல், விஞ்ஞானம் சித்தபுரியும் இந்தக்காலம்வரை தளிர் நடைபோட்டவண்ணமே யிருக்கிறான்.

"எனக்கு விடுதலை வேண்டும்!— நான் வாழமுடியாமல் தடுப்போரிடமிருந்து எனக்கு விடுதலை வேண்டும்!!"

"என் நாடு, வாழ வேண்டும். அது. வாழாமல் தடுப்போரிடமிருந்து என் நாட்டுக்கு விடுதலை வேண்டும்"

"சுதந்திரமாக, நான் எண்ண முடியவில்லை. அப்படிச் செய்வது மத சம்பிரதாயத்துக்கு, ஒவ்வாதாம். இதனின்றும் எனக்கு விடுதலை வேண்டும்"

"என் நாடு. தன் 'தலைவிதி'யை நிர்ணயித்துக்கொள்ள முடியவில்லை. தடுக்கிறார்கள், பிறர். அதினின்றும். என்நாட்டுக்கு விடுதலை வேண்டும்"

இவ்விதம், எழுப்பப்படும் உரிமைக் குரலை, மனிதன், இன்னும் ஒலிக்க வேண்டியவனாகவே இருக்கிறான்.

இந்த விடுதலைக் கீதம், என்றும் வெற்றிபெருமல் போனதில்லை — அடக்குமுறை அம்புகள் அள்ளி வீசப்பட்டாலும், பிணமலைகள் குவிக்கப்பட்டாலும், தீக்குண்டங்களில் தள்ளப்பட்டாலும், இந்தக் கீதம், அத்தனைப் பரீட்சைகளையும் தாண்டி, தென்றலெனப் பவனி வரும். இந்த 'விடுதலை அத்தியாயத்தின்' ஏடுகள், சமுதாய வளர்ச்சியின் தங்கத்தகடுகள். இதனை, அறியாதோர் இரார். ஆர்ப்பரித்தோடும் அடாபிடிகளில் இறங்கியோரும், ஆணவமாகப் பதிலளித்தோரும், இந்தக் கீதத்தின்முன், மண்டியிட்டு—மன்னிப்பு பெற்ற சம்பவங்கள் ஏராளம். மடமையென்னும் குன்றி விருந்தபடி திடீர் எனும் கற்பாறைகளை உருட்டிவிட்ட இத்தீயர்களின் குருதி, சிதறியதுண்டு! தாங்களே கட்டிக்காத்த, தூக்குமேடைகளில், தாங்களே தொங்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் ஆளானதுண்டு. அதனால்தான், கவிஞர், உறுதியான குரலில், உரத்துச் சொல்கிருர் — விடுதலை விரும்பிகளை நோக்கி — சுடர் முகம் தூக்கு! துணிந்து பணி செய்! தோள் தட்டு! புறப்படு!! — என்பதாக.

❀

-[வீரன் பேட்டி]-

★ புதுப் பேச்சாளர்! ★

நம்ப கவர்னர்—
ரோம்ப நல்ல கவர்னர்
வெறும் கதர்க்கோட்டு
கவர்னர், அல்ல!
ஆட்டபாட்டம் எல்லாம் உண்டு!
ஆளுமனசு மட்டும் வெள்ளை!
நம்ப கவர்னர்—
ரோம்ப நல்ல கவர்னர்.

*

"இந்தா, பாட்டு! மெட்டு எது தெரியுமோ?"—என்ருன், வீரன்.

"எங்கோ, கேட்ட மெட்டு போலிருக்கிறதே!"—என்றேன்.

"சுத்த பூஜ்யம்! உனக்கு எதுவுமே ஞாபகமிருக்காது" — என்ருன்.

"கோபம், வேண்டாம் — கூறு விஷயத்தை," என்றேன்.

"நீ, கேட்டாலும் கேட்கா விட்டாலும் நான் கூறத்தான் போகிறேன்! முதலில் 'கூல் டிரிங்ஸ்' கொண்டுவரச் சொல்!!" என்ருன்.

"ஏது, வீரா, ரொம்பக் குஷி போலிருக்கிறதே!"

"ஆமாம்! தஞ்சை மாவட்டம் சென்று வருகிறேன்..."

"அதனுல்......"

"ரொம்ப ஆனந்தமாயிருக்கிறது, எனக்கு. போன இடமெல்லாம், கழகப் பிரச்சாரம்தான்!"

"யாரப்பா, பிரசங்கி? முக்கியமானேரில் பலர் தான் சிறைக்குள் கிடக்கிருர்களே!"

"அவர்கள், ஏனப்பா? நாம் மாதா மாதம் ஆயிரக் கணக்கில் கொட்டிக் கொடுத்து ஆள் வைத்திருக்கும் போது......நமக்கென்ன, கவலை!"

மிடுக்கு தென்பட்டது அவன் முகத்தில்! வியப்பு அதிகமாகியது எனக்கு!!

"யாரப்பா, அந்தப் பிரசங்கி?"

"யாரா? போப்பா! விஷயங்களை, விளக்கி விளக்கி, தெரியவைத்தார். தேசிய நண்பர்கள் கூட, புரிந்து கொண்டிருப்பார்கள், நம் கழகத்தைப்பற்றி."

"மகிழ்ச்சி! யார், அந்தப் பேச்சாளர்!"

"புது ஆள்! நன்ருகப் பேசினுர். போன இடமெல்லாம், போலீஸ்காரர்கள் மரியாதையோடு, கூட்டங்களை நடத்திவிட்டுத்திரும்பினுர்.... முதலில் தஞ்சாவூரில் கூட்டம்...."

"ஊம்...அங்கே, என்ன பேசினுர்?"

"ஆரிய—வைசிய — க்ஷத்திரியர்களெல்லாம் ஆண்டு விட்டார்கள், நம் நாட்டை. இனிமேல் நாட்டின் அதிபதிகளாகப் போவது சூத்ரர்கள்தான். இனியேற்படப் போவது, சூத்ர ராஜ்யம்தான். சூத்ரர்கள் என்போர், உழைத்து வாழும் தொழிலாளர்கள்தான். இனி, அவர்கள் ராஜ்யம்தான் ஏற்படும்"

"சபாஷ்! நன்ருயிருக்கே—பிறகு?"

"பிறகு, சில ஊர்கள் சென்றுவிட்டு, நாகை சென்ருர்..."

"அங்கே, என்ன பேசினுர்?"

"என்னுடைய தஞ்சை ஜில்லா சுற்றுப்பிரயாணத்தில், இதுவே கடைசி கூட்டமாதலால், என் மனதில் உள்ளதை வெட்ட வெளிச்சமாகத் தெரிவித்துக் கொள்ள இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்கிறேன்...ஒரு சிலரால் தான் திராவிட இயக்கக் கிளர்ச்சி நடத்தப்படுகிறதென்று கூறப்பட்டது, என்னிடம். ஆனுல் இந்த இயக்கம் இங்கு பலமாக உள்ளது. மதத்தின் அடிப்படையில், நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று, அவர்கள் கூறவில்லை. வாழும் பகுதியை அடிப்படையாகக் கொண்டே நாட்டைப் பிரிக்க வேண்டுமென்கின்றனர்...."

"சொல்! சொல்!! நல்ல, விளக்கம்......"

"நாடு முழுவதும் ஒன்ருக இருக்கிறது. ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் தடைபோட முடியாது. அப்படி தனிப்பகுதி அமைத்துக் கொள்ளவும் வசதி இருக்கிறது. அப்படி செய்யுமுன் நாட்டின் ஒரு பகுதி மற்ருரு பகுதியை நாடி வாழாமல், சுயேச்சையாக இயங்கும்படியான தனி ரீதியில் அமைக்க முடியுமா என்பதை நிச்சயித்துக் கொள்ளவேண்டும்........."

"ஊம்—ஊம். அப்புறம்...?"

"அப்புறம் கூறியதுதான், மிகவும் முக்கியம்!"

"சொல்!"

"இதற்கு அரசியல் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஆனுல் அதை சாதிக்க சட்ட பூர்வமான முறைகளைத்தான் கையாள வேண்டும்"

"சபாஷ், வீரா! யார், இந்தப் பேச்சாளர். முகவரி, கொடு, பத்திரிகையில், போடுவோம்" என்றேன்.

"ஸ்ரீ பிரகாசா — சென்னை கவர்னர்" என்ருன்! திடுக்கிட்டேன், நான்! தினமணி, மித்திரன் ஏடுகளைப்போட்டான்!! படித்தேன்—வீரனே, தான் எழுதியபாட்டை, அனுபவித்துப் பாடிக்கொண்டிருக்கிருன்!!

❀

'கங்கை'யும் 'காவிரி'யும்!

"ராஜாஜியின் தலைமையில் நிர்வாகம் முன்னேற்றமடைந்து, சென்னையின் பெயரும் புகழும், செல்வாக்கும் மிக உயர்ந்திருக்கின்றன. இதை நன்றியுடன் நோக்கி, ராஜாஜியிடம் விஸ்வாசம் காட்டுவதற்குப் பதிலாக, அவர்மீதும் மந்திரிசபைமீதும் சிறுபிள்ளைத்தனமாகப் புகார்களையும் பழிகளையும் சுமத்திக் குற்றம் சாட்டுவது, நன்றிகெட்ட செய்கையாகும்."

நேரு பண்டிதர்
அக்-31.

*

"இவ்விஷயத்தைத் தீர்த்துக் கட்டியதுபற்றி நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது சேவைகள்பற்றி அவர் அன்புடன் குறிப்பிட்டுள்ளதற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்"

ஆச்சாரியார்,
நவ—2.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை மாநிலவாசியல்ல. டில்லியிலிருப்பவர். அவருக்குப் பிடிக்கிறதாம், ஆச்சாரியார், ஆட்சி! ஆச்சாரியாரின் திறமையில் நம்பிக்கையிருக்கிறதாம், அவருக்கு!!

அவருக்குள்ள நம்பிக்கை—அவருக்குப் பிடித்தமானவர்—ஆகவே, தென்னாட்டார், ஆச்சாரியாரை, ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்வண்ணம், தாக்கீது, வந்துவிட்டது, பண்டிதரிடமிருந்து. அதோடு, முடிந்துவிடவில்லை, விஷயம். பண்டிதர், சென்னைத் தேசியத்தாருக்குச் சிறிது, கோபத்தோடு ஒரு குறிப்பும் தந்துள்ளார்.

ஜோதிவெங்கடாசலத்தை மந்திரியாக்குமுன், எங்களைக் கலந்தாலோசிக்கவில்லை! — இது, காங்கிரசின் குற்றச்சாட்டு.

இதற்குப் பண்டிதர் அளிக்கும் பதில்,

"உங்களைக் கலந்தாலோசிக்காவிட்டால் என்ன. அவர், என்னைக் கலந்தாலோசித்துவிட்டுத்தான் புது மந்திரிகளை நியமித்தார்"

சென்னை மாநிலத்துக்கு மந்திரிகளைப் பொறுக்க, ஆச்சாரியார், ஆலோசனை தேடியது, இங்கல்ல; டில்லியிலிருப்பவரை.

வெளிப்படுத்துகிறார், பண்டிதர்—வேகமான வார்த்தைகளுடன்.

இங்கேயிருக்கும் சட்டசபை காங்கிரஸ்காரர்கள்—காங்கிரஸ் கட்சி—காங்கிரஸ் பிரமுகர்களை, ஆலோசிக்க விரும்பவில்லை, ஆச்சாரியார். ஏனெனில், இவர்களெல்லாம், தான் சொன்னபடி ஆடவேண்டிய எடுபிடிகளே தவிர, இவ்வித ஆலோசனைக்கெல்லாம், இலாயக்கற்றவர்கள், அவருக்கு!

கொடிதூக்கவும், எதிர்க்கட்சியைத் தாக்கவும், 'ஜே'போடவும், இங்கிருப்போர், தேவை.

ஆனால், ஆலோசனைக்கு, அருகதை பெற்றவர், அலாகாபாத்தார்.

தேர்தல் நடத்தி—கட்சியமைத்து—காரியமாற்ற, இங்கிருக்கும் காங்கிரஸ் தேவை.

ஆனால், கட்சியைப் பாதிக்கும் விஷயங்களில் கலந்து ஆலோசனை பெற பண்டிதர்தான், தேவை.

இவர்கள் சங்கூதுவர்! மாலைசூட, அவர்!!

இவர்கள் எடுபிடிகள்! அவர், எஜமானர்!!

இவர்கள், 'ஏனோதானுக்கள்!' அவர், தனக்கு ஆலோசனை கூறும் அருகதை பெற்றவர்!!

கோரிக்கை அனுப்பியோரின் தலைமையில் குட்டியது மட்டுமல்ல, அவமானக் குழியிலும் தள்ளியிருக்கிறார்.

நன்றியுடன் நோக்கி,
விஸ்வாசம் காட்டுவதற்குப் பதிலாக,
சிறு பிள்ளைத்தனமாக,
நன்றி கெட்டு,

நடந்துகொள்கிறீர்களே, என்றும் நேரு கேட்கிறார், தோழர்களே. இவர்கள்தான், ஆச்சாரியாரை, இழுத்துவந்து, அரசப் பொறுப்பில் உட்காரவைத்தனராம்! 'நீங்களேதானே அழைத்தீர்கள். இன்று மட்டும், அவர்போகவேண்டும் என்று இப்படியெல்லாம் செய்கிறீர்களே?' என்றும் நேரு கேட்கிறார்.

ஆச்சாரியாரை, அரியணையில் ஏற்றினர், தேசிய எம். எல். ஏக்கள்—அன்று. உண்மைதான், அது. அதனால், இன்று அவர் ஆட்சியின் கொடூரம் சகிக்க முடியவில்லை யென்றால், இவர்கள் அவரை விலக்க முயற்சிக்கக் கூடாதாம்.

இவ்விதம், ஒரு முறை, முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்தபின், தேசியத்தார், அவரையேயா, தொடர்ந்து முதலமைச்சர் பதவிவகிக்கச் செய்திருக்கிறார்கள்? இல்லையே! முன்பு பிரகாசம் இருந்தார்—அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து விரட்டினர்—பிறகு, ஓமந்தூரார் வந்தார் முதலமைச்சராக — அவரை விலகச் செய்துவிட்டு குமாரசாமிராஜாவை முதலமைச்சராக ஆக்கினர். இவ்வித முயற்சிகள் நடைபெற்ற போதெல்லாம், எங்கே, சென்றார் இந்த நேரு? ஓமாந்தூரார் கவிழ்க்கப்பட்டபோது உத்திரவிடாதவர், பிரகாசத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோது 'புத்திமதி' கூற முன் வராதவர், இன்று ஆச்சாரியாருக்கு ஆபத்தென்றதும், கடுமையான சொற்களால், வேகமான நடையில், தேசிய எம். எல். ஏ.க்களைப் பார்த்துக் கேட்கிறார். அதுவும், ஆச்சாரியார் கேட்கவில்லை—ஆனால், இந்த 'அலகாபாத்தார்' கேட்கிறார், 'அவரை, அன்றேன் அழைத்தீர்கள்? இன்றேன் போகச் சொல்கிறீர்கள்?', என்று. "கரும்பென்று நினைத்தேண்டி! கட்டிலில் படுத்தாண்டி! பாம்பாகமாறினாண்டி! பயந்துசெத்தேனடி!", என்று பாடுவதுண்டு, நாடகங்களில். அதையும் மிஞ்சி விட்டார், ஆச்சாரியார்! ஆனால் நேரு சொல்கிறார், 'பாம்பானாலும் கட்டித்தழுவிக்கிடப்பீர்!' என்று.

சென்னை விஷயத்துக்கு டில்லியி

விருந்து காக்கிறது. பிறகேன், தமிழ்நாட்டுக்கென ஒரு காங்கிரஸ் — அதற்கோர் தலைவர்—காரியதரிசி—கமிட்டி—எம். எல். ஏ. க்கள்?

*

மிரண்டு ஓடினாலும் சரி, அன்பு சுரந்து திரும்பினாலும் சரி, ஆச்சாரியார் அவர்களுக்கு, 'அபயம்' அளித்து வந்திருக்கிறது, கங்கைக் கரை. அதனை விளக்க, சான்றுகள் பல உண்டு.

இவ்விதம், 'அபயம்' அளிக்கும் போதெல்லாம், காட்டப்பட்ட, காரணமும் ஒன்றுண்டு. "ஆச்சாரியாரை, எதிர்க்கிறீர்களே! அவர், மூளையை இழக்கலாமோ?" இவ்வண்ணம், ஆச்சாரியாரின் மூளை பலம் குறித்து, அன்று முதல் இன்றுவரை, பேசப்பட்டு வருகிறது.

மூளைபலம் மிக்கவராம் அவர்! அதனால், மூக்கறுத்தாலும், மூக்கணாங்கயிறில்லா மாடுபோல கட்சிக் கூடாரத்தை விட்டு ஓடினாலும், தவறுகள் பல புரிந்தாலும், அவரைத் தாங்கிக் கொள்ள வேண்டுமாம்.

"அடி, தெரியுமோ, விஷயம்?" —என்று கேட்டாளாம், அண்டை வீட்டுக்காரி.

"என்னடி?" என்றாளாம், அவள் குரல் கேட்ட சொந்த வீட்டுக்காரி.

"உன் புருஷன் விஷயம்!" என்றாளாம், அவள்.

"என் புருஷனைப் பற்றி—என்னை விட, இவளுக்கென்ன விசேஷமாகத் தெரிந்து விட்டது?", என்ற எண்ணத்தோடு, 'என்னடி, விஷயம்!' என்றாளாம், இவள்.

"ஆகாகா! அவரது மூளையே மூளை! திறமையே திறமையே!!"—என்றாளாம், அவள்.

சொந்தக் கணவனைப் பற்றி, அண்டை வீட்டுக்காரி 'சர்டிபிகேட்' வழங்கினால், கணவனின் சேட்டைகளையும் கொடுமைகளையும் தாங்கி நலியும், மனைவி, என்ன நினைப்பாள்?

இந்தக் கதை போலிருக்கிறது—ஆச்சாரியாரின் மூளைபலத்தைப் பற்றி, 'அங்குள்ளோர்', அடிக்கடி கூறுவது.

ஆச்சாரியாரின் 'மூளை'யைப் பற்றி, இங்குள்ளோருக்குத் தெரியவில்லையாம்! டில்லியிலிருப்போர் தெரிவிக்கின்றனர்!!

தோட்டத்து மல்லியின் மணத்தை வீதியில் செல்லுவோன், விளக்கினால் விந்தைதானே. வீதிக்கு மணமும், வீட்டாருக்கு 'தழை'யாகவும் தென்பட்டால், அந்த மல்லியை, எருவிட்டு, நீரிட்டு, வளர்ப்பரோ, விவேகிகள்!

ஆச்சாரியார் மூளைபலம் மிக்கவராகவேயிருக்கட்டும்! அதனால் என்ன? பலன் உண்டா, சென்னைக்கு! நலம் உண்டா, அவருடைய ஆட்சியில்?

அவருடைய மூளைபலத்தில் அபாரபிரமிப்பு தென்பட்டால், பண்டிதர் அழைத்து வைத்துக் கொள்ளட்டுமே, பக்கத்தில்.

'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ, சர்க்கரை,' என்றோர் பழமொழி உண்டு. அத்தகைய நிலையில் தான், டில்லியிருக்கிறதோ! —எனும், ஐயம் உருவாகிறது, நமக்கு; ஆச்சாரியாரின் 'மூளைபலம்' விளக்கம் கேட்கும் போது.

ஆச்சாரியாருடைய் மூளைபலம், எங்கே வேலை செய்கிறது! யாருக்கு வேலை செய்கிறது! எதற்கு வேலை செய்கிறது! — அறிவோம், நாம். அதனால்தான், 'அந்த மூளை'யை வேண்டாமென வெறுக்கின்றனர், தேசியக் கூடாரத்தில்.

ஆனால், பண்டிதரோ, அதையே காரணமாகக் காட்டி, தாக்கீது, பிறப்பிக்கிறார்.

*

மூளைபலமிக்கோர் தாம் தேவையெனில், ஆச்சாரியாரல்ல—அவரை விட அனுபவமும் திறமையுமிக்கோர், ஏராளமிருக்கிறார்கள். ஆற்காட்டு ராமசாமி — லட்சுமணசாமியையும், அரசியல் அமைப்பு நிபுணர் ரத்னசாமியையும், மனவாள ராமானுஜத்தையும், அல்ல நாம் கூற விரும்புவது. சச்சிவோத்தம சர். சி. பி. ஐயர் இருக்கிறார்! மயிலையிலும் மாம்பலத்திலும் ஏராளமான சாஸ்திரிகளும் சர்மாக்களுமிருக்கிறார்கள்!! அவர்களை அழைத்து, அருகேயமர்த்தி, ஆலாபனம் செய்யலாமே. கட்சியையே அறியாத கோபாலசாமி அய்யங்காரை விட, இவர்கள் என்ன மட்டமா? இல்லையே! எனினும், ஆச்சாரியாரிடமட்டும், அதி நூதன மூளையமைந்திருப்பதாகக் கூறப்படுவதேன்?

இந்த 'மூளை'யைவிட—ஓமாந்தூரார் ஆண்டாரே, அவர்காலத்தில், என்ன கெட்டுப் போயிற்று! சென்னை சர்க்கார் காரியாலயம் சென்றால், இன்று சிரிப்பாய்ச் சிரிக்கிறது. ஓமந்தூரார் காலத்தில்—அதனையா, காண முடிந்தது. அவர் என்ன, படித்தவரா! பட்டம் பெற்றவரா! அல்லது கவர்னர் ஜனரலாகத்தான் இருந்தவரா!! அவர் காலத்தில் இல்லாத நன்மைகளை, ஆச்சாரியார், என்ன செய்து காண்பித்துவிட்டார்?

*

மூளை பலமாம், மூளை பலம்! — இதனையேத் தன் மூல பலமென்று எண்ணிவந்திருக்கிறார் ஆச்சாரியார்.

இதனாலேயே, கட்சிக் கட்டுப்பாடுகளை மதித்ததில்லை, அவர். சட்டவரம்புகளை மீறத்தயங்கியதுமில்லை. தன்னிஷ்டம்போல், நடக்கவும் கூசியதில்லை

அத்தகைய ஒருவரை, தமிழக அரசியல் இன்னும் உலவவிட்டுக் கொண்டிருக்கிறது! அவரும்அன்று முதல் இன்றுவரை, ஆர்ப்பரித்த வண்ணமிருக்கிறார்!!

அத்தகைய ஆசாமியிடம், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சியினர், நாணயத்தையும் கண்யத்தையும் எதிர்பார்ப்பது, தவறென்போம்.

அதைவிட மாபெரும் தவறு, அன்றுமுதல் இன்றுவரை, அவருக்கு 'அபயம்' அளித்துவரும் 'கங்கைக்கரை'க்கு வேண்டுகோள் விடுப்பது என்போம்.

இதே தவறுகளை, தொடர்ந்து செய்துவருகிறார்கள், தேசியநண்பர்கள்! அடிக்கடி 'குட்டுப்படவும்' செய்கிறார்கள்! அனாதையாகவும் ஆகிறார்கள்!! அந்தோ, தமிழக அரசியல் உலகமே, என்றுதான் உனக்கு மீட்சியோ? இந்த 'மூளை பல'க்காரர்களின் அட்டகாசத்திலிருந்து மீள்வாயோ!

★

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
25, Tirukkachinambi St., Kancheepuram.